www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com



இன்றைய ஆட்சியாளரைத்தான்
கேட்கிறேன்-
உங்கள் ஆட்சியை எங்களது
சுயராஜ்ய ஆட்சி என்று சொல்ல-
நீங்கள் எங்களுக்காகச்
சாதித்தது என்ன?
உங்களாட்சியில்
இன்னும் சூத்திரன்
இருக்கின்றானே!
இப்பிரிவையாவது ஒழித்தாயா?
எங்களைத் தேசியம் என்ற
பேரால் வடநாட்டுப் பனியாக்
கூட்டம் சுரண்டி வருவதை
நீ தடுத்து விட்டாயா?
எங்கள் மானத்தைப் பற்றித்தான்
உனக்குக் கவலை இல்லை.
எங்கள் பசியைப் பற்றித்தான்
கவலைப்பட உனக்கு
நேரமில்லை.
எங்களுக்கு படிக்க பள்ளி வைத்துக் கொடுக்கத்தான்
உன்னிடத்தில் மனமில்லை.
சரி அத்தனையும் தொலைந்து போகட்டும்!
உன்னுடைய ஆட்சியில் சமாதானமோ சாந்தியோ ஏற்பட்டு
விட்டதா?

-தந்தை பெரியார்

*(ஆழியூரில், 10-01-1948 அன்று பேசியதிலிருந்து)*
*(விடுதலை நாளிதழ் 19-01-1948)*

*வாழ்த்துக்களுடன்...*

பகுத்தறிவாளர் கழகம்
அருப்புக்கோட்டை

விடுதலை, உண்மை, Rationalist படியுங்கள்

www.padippakam.com

கதவு - 09
ஜனவரி 2001
வெளியீடு :

கருத்தாளர் வட்டம்
(A unit of APPA)
5-36-4ஆ, பாரதி நகர்,
மின்வாரிய குடியிருப்புகள் கிழக்கு
அருப்புக்கோட்டை - 626 101.
பேச: 04566-73322.

நிர்வாக ஆசிரியர் :

மதிகண்ணன்
(கலைவழி மக்கட் பணியம்)

துணை ஆசிரியர் : முரளீ

ஆசிரியர் குழு : ஜெயராம்
ஜீவநேரு
அழகு பாரதி
அன்புச் செல்வன்

கணினி : சுமதி மதி &
சிவா லேசர் பிரிண்டர்ஸ்
பேச: 04566-72768.

அச்சு : முத்து அச்சகம்
பேச: 04566-73801

மதிப்புரைக்காக நூல் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

படைப்புகள் படைப்பாளிகளின் கருத்துக்களையே முன்வைக்கின்றன. APPAவின் கருத்துக்களை அல்ல.

ஆண்டுச்சந்தா
உள்நாடு ரூ.40/-
ஐந்தாண்டுகள் ரூ.150/-
வெளிநாடு ரூ.300/-(ஆண்டு)
M.O
நிர்வாக ஆசிரியர்
பெயரில் அனுப்பவும்
D.D
'Action for People
through Promotion of Arts'
என்ற பெயரில் எடுக்கவும்

அன்பு நண்பர்களே...

கதவிற்கு ஐந்தாண்டு நன்கொடையாக ரூ150/- அனுப்பும்படி சென்ற இதழில் கேட்டிருந்தோம். ஐம்பதிற்கும் மேற்பட்டோர் ரூபாய் நூற்று ஐம்பதும் அதற்கு மேலும் கூட அனுப்பி இருந்தீர்கள். கதவின் வளர்சியில் தாங்களும் பங்கு கொண்டதில் மிக்க மகிழ்ச்சி.

நிறைய புதிய நண்பர்களிடம் இருந்து - கதவு பற்றி கேள்விப் பட்டோம் மாதிரிப் படி ஒன்று அனுப்பி வையுங்கள் - என கடிதங்கள் வருகின்றன. மகிழ்ச்சியாக நிறையப் பேருக்கு (முன்பு) மாதிரிப் படி அனுப்பினோம். அதே நண்பர்களிடமிருந்து சுமார் ஆறு அல்லது ஏழு திங்கள் கழிந்து மீண்டும் அதே வாசகங்கள் தாங்கிக் கடிதங்கள்.

இப்படிப் பட்டவர்கள் தொடர்ந்து இதழ்களை இலவசமாகப் பெற முயற்சி செய்வது தெரிகிறது. இவர்களைப் போன்றவர்களை அடையாளம் காணவே நமக்கு எட்டு இதழ்கள் ஆகிவிட்டதில் வருத்தமே.

தங்கள் பகுதியின் சின்னஞ்சிறு இலக்கியக் கூட்டம் பற்றிய குறிப்புகளையும் அனுப்பி வையுங்கள். அதனையும் பதிவு செய்வோம்.

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர் குழு.

*அட்டைவடிவமைப்பு (கணினியில்): பாண்டியராஜன் (வயது16-மதுரை-3)*



படிப்பகம்

www.padippakam.com

# புகலிட இலக்கியம்

**(சில வரலாற்றுக் குறிப்புகள்-3)**

எம் . ஆர் . ஸ்ராலின்
பிரான்ஸ்

இங்கிலாந்தில் வெளியான தமிழ் சஞ்சிகைகளான ஈழகேசரி, பாலம், புலம் என்பவற்றில் இருந்தும் தாகம், பனிமலர் போன்றவற்றில் இருந்தும் முழுக்க முழுக்க வேறுபட்டு நின்ற ஒரு சஞ்சிகைதான் உயிர்ப்பு என்பதாகும். அதுமட்டுமன்றி முழுத் தமிழ் புகலிட இலக்கிய சஞ்சிகையில் இருந்தும் இது தன்னை வித்தியாசமாக இனம் காட்டியது. இதனை ஒரு இலக்கிய சஞ்சிகையாக கொள்வது எங்ஙனம் - என்கின்ற கேள்வி எழும் அளவிற்கு இந்த உயிர்ப்பு ஓர் முழு அரசியல் சஞ்சிகைக்கு உரிய தார்ப்பரியங்களுடன் நிறைந்திருந்தது.

புகலிட இலக்கியத்தின் ஆரம்ப சூழல்கள் இலங்கை அரசியலில் இரு பெரும் ஆதிக்க சக்திகளான அரசினதும் புலிகளினதும் செயற்பாடுகளின் மீது பலத்த மாற்றுக்கருத்துக்களைத் தெரிவித்து வந்திருக்கிறது. இதனை நிரூபிக்கும் வண்ணம் பல சஞ்சிகைகளிலும் இடம்பெற்ற படைப்பிலக்கியப் பிரதிகள் மாற்று இலக்கியங்களாய்க் காணப்பட்டன.

இந்நிலையில்தான் உயிர்ப்பு சஞ்சிகையானது படைப்பிலக்கியப் பிரதியில் இருந்து வெளியே வந்து நேரடியாகவே அரசியல் சித்தாந்த தளங்களில் தனது கருத்துக்களை முன்வைத்தது. இலக்கிய மாநாடுகள், விளம்பரங்கள், பரிசுப்போட்டி அறிவித்தல்கள் என்று சிறு சஞ்சிகைகளின் பக்கங்கள் நிரம்பி வழிகின்ற இன்றைய சூழலில் அரைப்பக்க விளம்பரங்களுக்குக் கூட இடம் ஒதுக்காது விடயதானங்கள் செறிந்த ஒரு சஞ்சிகையாக உயிர்ப்பு காணப்பட்டது. 1992ல் ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினர் தங்களை வெளிப்படையாக இனம்காட்டாது விட்டிருந்தபோதிலும் உயிர்ப்பின் முதலாவது இதழ் ஆசிரியர் தலைப்பினைக் கொண்டு இவர்கள் முழுக்க முழுக்க தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முன்னாள் போராளிகளாய் இருந்தவர்கள் என்பது வெளிப்படையாகிறது.

உயிர்ப்பு முன்வைத்த விவாதப்பொருட்கள் அவ்வேளை கனடா, ஐரோப்பா சார்ந்த புகலிட இலக்கியச் சூழலில் பெரும் தாக்கத்தையும் சிறுசிறு குழு விவாதங்களையும் ஏற்படுத்த வழி கோலியது. சொந்த நாட்டின் விடுதலை விரும்பிகளாய்ப் புறப்பட்டு இறுதியில் தத்தமது சுய இருப்பைக் காப்பதே பெரும்பாடாய்ப் போன பரிதாபகரமான சூழலில் புகலிடத்தில் தஞ்சம் கோரியிருந்த இளைஞர், யுவதிகளின் நம்பிக்கை நட்சத்திரமாய் இந்த உயிர்ப்பு தொடர்ந்தது. உயிர்ப்பில் வெளியான ஒவ்வொரு கட்டுரையும் அதுசார்ந்த விவாதங்களும் இலங்கைத் தமிழ் அரசியலில் ஒரு ஜனநாயகச் சூழலின் அவசியம் குறித்தும் அதை அண்டி எதிர்கால விடுதலை குறித்தும் மிக நிதானமாகத் தேர்ந்து பிரசுரிக்கப்பட்டிருந்தன.

# புலிகள் தவிர்த்த தமிழீழ விடுதலைக்கான இயக்கங்கள் புலிகளால் தடை செய்யப்பட்டு அழித்தொழிக்கப்பட்டமை.



படிப்பகம்

www.padippakam.com

# வடகிழக்குத் தமிழர் பிரச்சனையில் தவிர்க்க முடியாத மூன்றாவது தரப்பான இந்தியா தமிழ்த் தேசியத்தின் நேரடி எதிரியாக்கப்பட்டமை. இவை போன்ற காரணங்களால் 1983 இல் இருந்த வேகமும் அதேவேளை இனவிடுதலையின் ஊடான சமூக விடுதலை என்கின்ற நிதானமும் அற்று 1990களில் பல்வித குழப்பகரமான சூழ்நிலைகளில் போராட்ட சக்திகள் சிக்கிக்கொண்டமையும் அதன் காரணமாக தென்னிலங்கை, இந்தியா என்பனவற்றுக்கு வெளியே மூன்றாவது புகலிடம் ஒன்று தேடி இப்போராட்ட சக்திகளில் பங்கெடுத்த பலர் ஒதுங்கிக் கொள்ள நேர்ந்தது. இந்நிலையில்தான் 1990ல் அன்றுவரை தமிழ் பேசும் மக்களாக இருந்த முஸ்லிம் மக்கள் வடக்கில் இருந்து புலிகளால் துரத்தியடிக்கப்பட்டமையும் கிழக்கு மாகாணத்தில் பள்ளிவாசல் படுகொலைகளை நிகழ்த்தும் அளவிற்கு புலிகள் மாறிப்போனமையும் நிகழ்ந்தேறியது.

தமிழீழ விடுதலையின் பேரில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகள் அனைத்தும் ஓர் தத்துவார்த்த ஜனநாயகக் கண்ணோட்டத்தில் ஆராயப்பட வேண்டும், விமர்சிக்கப்பட வேண்டும். அதனூடு தமிழ் பேசும் அனைத்து மக்களுக்குமான விடுதலை வேண்டி தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்த்தெடுக்கப்பட்டு செல்லப்படவெண்டும் என்கின்ற ஓர் நம்பிக்கை தரும் செய்தியோடும் அதற்காக ஓர் மூன்றாவது அணி புகலிடத்தில் இருந்து உருவாக்கப்பட வேண்டும் என்கின்ற அவசியம் குறித்த விவாதங்களையும் வரவேற்று வெளிவந்தது இந்த உயிர்ப்பு.

இலங்கைத் தமிழ்த் தேசியம் குறித்த பல்விதமான ஆய்வு முயற்சிகளில் இறங்கிய உயிர்ப்பு தேசிய இனப்பிரச்சனையில் மார்க்சிய நிலைப்பாடு என்பது குறித்து விளக்கமாக ஆராய்ந்து - மார்க்ஸ், லெனின், ஏங்கல்ஸ் போன்ற மார்க்சிய முன்னோடிகள் தேசிய இனப்பிரச்சனைகள் குறித்து முன்வைத்த கருத்துக்களும் அவை உருவான வரலாற்றுச் சூழல்கள் குறித்தும் ஆராய்ந்ததோடு மேற்படி கருத்துக்கள் எல்லாச் சூழலுக்கும், எல்லாக் காலங்களுக்கும் பொருத்திப் பார்க்க முடியாதது என்பதிலும் தெளிவாய் இருந்தது. மாறாக மேற்கோள்கள் பின்பற்றுகின்ற வறட்டுக் கோட்பாட்டாளர்கள் இயங்கியலையே மறுப்பவர்கள் ஆவார்கள் என்றும் - அவ்வகையில் இலங்கையில் இடதுசாரிகளாய் இருந்தவர்கள் (தமிழ், சிங்கள) கூட இவ்வாறு வறட்டுக் கோட்பாட்டாளர்களே ஆவர். தமிழ்த் தேசியத்தின் மீதான ஒடுக்குமுறை குறித்து மௌனம் காத்திருந்த அன்றைய இடதுசாரிகள் தங்கள் வரலாற்றுக் கடமையைத் தவறவிட்டவர்கள் என்கின்ற கடுமையான விமர்சனங்களையும் உயிர்ப்பு இதழில் காணமுடிகிறது.

இலங்கைத் தமிழத் தேசியச் சூழலில் தேசியச் சக்திகள் யார்? இராணுவ ரீதியில் இன்று பலமாய் இருக்கும் புலிகளை தேசிய சக்தியாகக் கருதலாமா? என்பது போன்ற சர்ச்சையான விவாதங்களையும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஐக்கிய முன்னணி ஒன்றின் தேவை என்ன என்பது குறித்த தொடர்ச்சியான விவாதங்களையும் உயிர்ப்பு ஏற்படுத்தியது. பாரிசில் இருந்து சமர், மனிதம் (சுவிஸ்). தூண்டில் (ஜேர்மனி) போன்ற சஞ்சிகைகளும் இவ்விவாதங்களில் ஈடுபட்டிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

அதிகமான விடுதலை இயக்கங்கள் சிறிலங்கா அரசிடம் சரணடைந்து விட்டன என்பதனால் பலமான ஒரு மாற்று அமைப்பு இருந்தால் மட்டுமே புலிகளுடனான ஐக்கிய முன்னணி சாத்தியம் என்கின்ற கருத்தை முன்வைத்த உயிர்ப்பு ஐக்கிய முன்னணி குறித்து அதிகம் அக்கறை கொள்ளவில்லை. தேசிய சக்தி குறித்த விவாதத்தில் 'சிங்களத் தரகு முதலாளித்துவ வர்க்கம் இனவாதக் கண்ணோட்டத்துடன் முன்னெடுத்த பல்வேறு இன ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு வர்க்கங்களையும் வர்க்கத் தட்டுகளையும் தேசிய இயக்கத்தில் குதிக்குமாறு தூண்டியது' என எழுதிய உயிர்ப்பு முதலாவது இதழ் - ஆகவே, 'தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வர்க்க நலன்களும் பிணைக்கப்பட்டுள்ளன' என்றும் கூறி, 'தமிழ்த் தேசியமானது - சிங்களப் பேரினவாதத்துக்கும், தரகு முதலாளித்துவ அரசுக்கும் எதிரானது என்ற வகையில் நடப்பில் உள்ள சமூக அமைப்பை எதிர்த்துப் போரிடும் முற்போக்கான அம்சங்களைக் கொண்டதாகும். ஏகாதிபத்தியத்தின் நலன்களுடனும் இந்திய மேலாதிக்க நலன்களுடனும் இது ஏற்கனவே முரண்பட்டுள்ளமை இதன் முற்போக்கான பாத்திரத்தின் வெளிப்பாடாகும். ஆனால் தமிழ்த் தேசியமானது பல குறுகிய மதிப்பீடுகளைக் கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். யாழ், இந்து சாதிய எல்லைக்குள் இன்னும் சிக்கிக் கொண்டிருக்கிறது. பிரதேச, சாதிய, மத எல்லைகளைக் கடந்து ஒரு விரிவான தேசியமாக இதனால் வளரமுடியும்' எனக் கூறி, இன்றைய பிற்போக்குத் தலைமையை இனம் காண்பதும் நிராகரிப்பதும் குறித்து கருத்துக்களை முன்வைத்த உயிர்ப்பு மாற்றாக தெளிந்த சித்தாந்தத்தால் வழிநடத்தப்படும் கட்சி ஒன்றின் தேவைக்காக உழைப்பது சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளின் அவசியக் கடமையாகும் என்ற கருத்தை முன்வைத்தது.

சமூகவிடுதலை என்பது பெண்விடுதலையை முன் நிபந்தனையாகக் கொண்டுள்ளது என்கின்ற கருத்தில் அதிக அக்கறை காட்டிய உயிர்ப்பு இதழ்-3இல் கெய்டி கார்ட்மன் (HEIDI HARTMANN) எழுதிய 'மார்க்சியத்துக்கும் பெண்ணிலை வாதத்திற்கும் இடையிலான மகிழ்ச்சியற்ற திருமணம் - மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவை நோக்கி' எனும் கட்டுரை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. சோசலிசப் பார்வையில் பெண்ணிலைவாத அணுகுமுறை குறித்து பேசும் இக்கட்டுரை தீவிரப் பெண்ணிலைவாதிகளின் கருத்துக்கள் பற்றியும் விளக்கங்களை முன்வைத்தது.

இதழ்-5 - ஒவ்வொரு இனமும் தம்மைப் புனிதமாக்கி மற்றையதை இரண்டாம் பட்சமாக்கும் கைங்கரியத்தின் வரிசையில் சிங்கள இனமும் தம்மீது கட்டமைத்துக் கொண்ட புனிதங்கள் குறித்தும் தமிழ்த் தேசத்தை எதிரியாகக் காட்டி கட்டமைத்துள்ள ஐதீகங்கள் குறித்தும் விளக்கி பல்வேறு வரலாற்று ஆதாரங்களின் துணையோடு அவற்றைக் கட்டுடைக்கும் பணியையும் செய்த சிறந்ததொரு கட்டுரையை வெளியிட்டு இருந்தது.

முதல் ஐந்து இதழ்களும் 1992-1995 காலப்பகுதியில் வெளியாகின. 1996 ஏப்ரலில் வந்த உயிர்ப்பின் 6ஆவது இதழ் முஸ்லிம் தேசம் பற்றிய



படிப்பகம்

www.padippakam.com

*சிறப்பிதழாக தன்னை இனம் காட்டியது. 'தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இதுவரை பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்துள்ளது. சாதிய*

**நிகழ்காலப்பதிவுகள்**

- **இலக்கியச் சந்திப்பின் 26ஆவது தொடர் கடந்த யூன் 10,11ஆம் திகதிகளில் ஜெர்மனியில் நடைபெற்றது. ஐரோப்பாவின் பல நாடுகளில் இருந்தும் இலக்கியவாதிகளும், வாசகர்களும் கலந்து கொண்டனர்.**
- **தாமிரபரணி படுகொலைகளின் ஓராண்டு நினைவின் அதுகுறித்த விவரணப் படமான ! ஒரு நதியின் மரணம்' ! எக்ஸில் நண்பர்களால் 4-6-2000 அன்று திரையிடப்பட்டது.**
- **ஐரோப்பாவின் பெண்கள் சந்திப்பின் 19 ஆவது தொடர் பாரிசில் யூலை 29,30 ஆகிய தினங்களில் இடம் பெற்றது. இதுவரைகாலமும ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் மட்டும் நடைபெற்று வந்த இச்சந்திப்பு இம்முறை முதல் தடவையாக பிரான்சில் நடாத்தப்பட்டது. மேலும், ஒரு நாள் மட்டுமே நடைபெறும் பெண்கள் சந்திப்பு இம்முறை இருநாட்கள் நிகழ்த்தப்பட்டமையும் இந்தியாவில் இருந்து சிவகாமி அவர்கள் தலித் பெண்ணியம் பற்றி உரையாற்ற சிறப்பாக அழைக்கப்பட்டிருந்தமையும் சந்திப்பனை மேலும் பயனுள்ளதாக்கியது.**
- **கனடாவின் றொறினரோ நகரில் ! தேடகம்! என்றழைக்கப்படும் தமிழர் தகவல் வளத்துறை நிலையத்தின் 10 ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. யூலை முதலாம் திகதி நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சக்கரவர்த்தியின் ! யுத்த சன்னியாசம்! என்கின்ற கவிதா நிகழ்வு குறிப்பிடத்தக்கது.**
- **யூன் 9 அன்று கனடாவிலும், யூலை 23 அன்று பாரிசிலும் ! யுத்தத்தின் இரண்டாம் பாகம்! நூல் வெளியீடும், விமர்சனமும் இடம்பெற்றது. மேற்படி நூல் 26 ஆவது இலக்கியச் சந்திப்பில் எக்ஸில் வெளியீடாக வெளியிடப்பட்டிருந்தது.**

*ஏற்றத்தாழ்வுகள், பிரதேச வேறுபாடுகள், வெகுசனப்படுத்தலின்மை, அராஜகம், பெண்களின் நிலை... என்பனவற்றுடன் இப்போது முஸ்லிம் மக்களின் விடயமும் தீர்க்கமான விடயமாக முன்தள்ளப்பட்டு உள்ளது' என்பதாகத் தொடங்கி இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகமும், தனித்துவமும், குடிசனப்பரப்பலும், சமூகத்தன்மையும், தெற்கு முஸ்லிம்கள், வடகிழக்கு முஸ்லிம்கள், கிழக்கின் தமிழ் முஸ்லிம் வன்முறை மோதல்கள் என்கின்ற பல்வித தலைப்புகளில் இலங்கை முஸ்லிம்கள் பற்றிய ஆய்வு நோக்கிலான கட்டுரைகளை பிரசுரித்திருந்தது. (விக்ரர் எழுதிய மேற்படி கட்டுரைகள் 1997இல் இலங்கையில் இருந்து முஸ்லிம் தேசமும் எதிர்காலமும் என்கின்ற தலைப்பில் மூன்றாவது மனிதன் வெளியீட்டகத்தினால் நூலுருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.)*

*1985இல் ஏற்பட்ட முஸ்லிம் தமிழ் கலவரங்களும் அதனைத் தொடர்ந்து விடுதலை அமைப்புகளால் முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட வன்முறைகளும் முஸ்லிம்களை ஒருமித்து சிந்திக்கத் தூண்டியது என்பதும், மேலும் 1990 இல்*



படிப்பகம்

www.padippakam.com

புலிகளால் நடாத்தப்பட்ட பள்ளிவாசல் படுகொலைகள் ஒரு லட்சம் யாழ்ப்பாண முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்டமை போன்ற நிகழ்வுகளின் பின்னர் அவர்கள் தங்களை ஓர் தேசிய இனமாக அடையாளப் படுத்தத் தூண்டியது.

இந்நிலையில் இலங்கை முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என அறுதியிட்டுக் கூறியதோடு அவர்கள் தங்கள் தேசம் குறித்த சுய நிர்ணய உரிமை கொண்டவர்கள். அதை நாம் பூரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பல புத்திஜீவித சஞ்சிகைகளினதும், முற்போக்கு இடதுசாரிச் சிந்தனையாளர்களினதும் மௌனம் காக்க அம்மௌனங்களைக் கலைத்துக் கொண்டு பகிரங்கமாகவும் திட்டவட்டமாகவும் அறிவித்தது உயிர்ப்பின் 6-ஆவது இதழ்.

இது குறித்து மேலும் எழுதும் போது 'முஸ்லிம் தேசம் சிலவேளை சிங்கள அரசின் கீழ், சிங்கள தேசத்துடன் வாழ முடிவு செய்யுமாயின் அந்நிலையையும்கூட இதே அடிப்படையிலேயே தமிழ் தேசம் நடந்து கொள்ள வேண்டும்.' 'வடகிழக்கில் தமிழ், முஸ்லிம் என இரண்டு தேசங்கள் நிலவுகின்றன என்றும் அவை இரண்டும் அரசியல் ரீதியில் சமத்துவமானவை என்பதையும் ஒரு தேசத்தின் உரிமைகளில் தலையிடுவதற்கு இன்னொரு தேசத்துக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்பதையும் தமிழ் முற்போக்குப் பிரிவினர் உணர்ந்து கொள்ள வேண்டும்' என்றெல்லாம் எழுதினாலும் தொடர்ந்து ஒரே தாயகத்துக்குள் வாழுகின்ற வெவ்வேறு தேசங்களுக்கிடையே ஏற்படக்கூடிய உறவுகள் குறித்து சாதக பாதக அம்சங்களை பரிசீலித்த உயிர்ப்பு தனது தமிழீழக் கனவை சிதைக்காமல் ஒற்றைத் தாயகம், இரு தேசங்கள் என்கின்ற சொல்லாடல்களின் ஊடு ஓர் சமூக விடுதலையை முன்னெடுக்கும் சஞ்சிகை என்ற எல்லைக்குள் வருவதற்கு தயங்குகின்ற நிலையிலும், தமிழ்த் தேசியத்தின் பிடியின் சுவர்களை தாண்ட முடியாமல் சிக்கித் தவித்தது.

ஆக உயிர்ப்பு முஸ்லிம்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அச்சமூகத்தின் விதியை தனது தமிழ்த் தேசியத்தின் எதிர்கால நலன் குறித்த அக்கறையில் நின்று வழுவாமல் தானே தீர்மானிக்க முனைந்தது. அதாவது தமிழீழம் என்கின்ற ஒரே தாயகத்துக்குள் இரு தேசங்கள் என்ற பெருங்கதையாடலை நவீன வடிவில் மீண்டும் முன் மொழிந்தது. (இந்த உயிர்ப்பு குழுவினரே கடந்த ஆண்டில் இருந்து 'தமிழீழ மக்கள் கட்சி' என்கின்ற பெயரில் லண்டனை மையமாகக் கொண்டு இயங்கி வருவதோடு 'தமிழீழம்' என்கின்ற மாதாந்த பத்திரிகை ஒன்றையும் நடாத்தி வருகின்றார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு எடுத்து வைக்கின்றேன்.)

- தொடரும்....

**முன்னேறும் சந்தர்ப்பங்கள் தானாக வருவதில்லை.**
**அவைகள் உருவாக்கப்படுகின்றன.**
**-ஓரிஸன் ஸ்வட் மார்டன்**



படிப்பகம்

www.padippakam.com

# 'பாரதி'க்கு முதல் பாராட்டு

பாரதி படம் வெளிவந்தவுடன் முற்போக்கு சிந்தனையாளர்கள் தமிழக அரசுக்கு 'வரிவிலக்கு' அறிவிக்கக் கோரினர். தமிழக அரசும் 'சுதந்திரப் போராட்டத்துக்குத் தமது பாடல்கள் மூலம் எழுச்சியை ஏற்படுத்திய மாபெரும் தமிழ்க் கவிஞர்' என்பதாகச் சொல்லி வரிவிலக்கு அளித்துள்ளது.

பாரதி, பாரதிதாசன், பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம், புதுமைப்பித்தன் போன்றவர்களைத் தங்களின் ஆசான் படைப்பாளர்களாக ஏற்றுக்கொண்டு கலை இலக்கியம் படைத்து வருகின்ற இலக்கிய அன்பர்களின் சார்பில் 'பாரதி' திரைப் படத்திற்கு முதல் பாராட்டுவிழா 2000 அக்டோபர் 5ஆம் தேதி விருதுநகர் தேசபந்து மைதானத்தில் நடைபெற்றது. கலை இலக்கிய இரவு முழு மழைஇரவானது. ஆயினும் பங்கேற்பு பலமானதாக இருந்தது. நள்ளிரவு 12.30 மணியளவில் 'பாரதி' பட இயக்குநர் ஞானராஜசேகரன் IAS மேடையேறினார். தமுஎச-வின் நன்மாறன் பாரதியின் பன்முகப் பரிமாணங்களில் இன்றைய தேவையான ஜாதி ஒழிப்பு, மதநல்லிணக்கம், பெண்விடுதலை ஆகியவற்றைத் தகுந்த அளவில் கலந்து 'பாரதி'யைத் தந்த ஞானராஜசேகரனை வாழ்த்தி நினைவுப்பரிசும் தந்து சால்வை அணிவித்து கௌரவப்படுத்தினார்.

பாராட்டுக்கு ஏற்புரை நிகழ்த்திய ஞானராஜசேகரன் 'பாரதியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு (14பேர் மட்டுமே). சொல்லொன்று செயலொன்றாக வாழ்ந்திருந்தால் ஏராளமானோர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டிருப்பர். பாரதியின் பழமைவாத எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, சாதி மத வெறி எதிர்ப்பு இவற்றோடு சுதந்திரப் போராட்டம், பெண்விடுதலை போன்ற விஷயங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு (கிட்டத்தட்ட நூறாண்டுகளுக்கு முன் உள்ள சமூகச் சூழலில்) நடைமுறைப்படுத்தியவன். பாரதியை முழுமையாகச் சொல்ல இன்னும் ஆறு படங்கள் எடுக்கலாம். இன்றைய தேவைகளை மனதிற் கொண்டே இந்த பாரதியைத் தயாரித்தோம்' என்றார்.

விருதுநகரைத் தொடர்ந்து சென்னையில் தமுஎச சார்பில், கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் என பாராட்டு விழாக்கள் பாரதிக்குத் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. 'ஆஸ்கர்' விருதுத் தேர்வுக் குழுவுக்கும் 'பாரதி' அனுப்பப் பட்டிருக்கிறது.

'புரட்சிக்காரர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள்' என்பது போல் புரட்சி என்ற வார்த்தையை தமிழுக்குத் தந்த பாரதி இந்த திரைப்படத்தின் மூலம் இளம் சமுதாயத்தினருக்கு விதையாகியிருக்கிறான்.

**- திலீப் நாராயணன்**

**விருதுநகர்**



படிப்பகம்

www.padippakam.com

# எச எழுத்து

**(இதழ் 7 & 8க்கான கடிதங்கள்)**

அநேகமாக தமிழ் எழுத்துச் சூழ்நிலையில் என்வரையில் அறியாத பெயர்களாக இருந்தது. (இதழ் குழுவினரைத்தான் சொல்கிறேன்) இருந்தும் இதழின் கனம் (உள்ளடக்கம்) கூடுதலாக இருந்தது. தீவிரமான சிந்தனைகளின்பால் வாசிப்பாளரை அழைத்துச் செல்வதாயும் இருந்தது.

- ஆத்மா நாம்
சென்னை

வடிவமைப்பு அச்சாக்கம் போல கட்டுரைகளும் படைப்புகளும் சிறப்பாய் உள்ளன. கவிதைகளில் உள்ளடக்க செறிவிற்கு வலுசேர்க்கும் தேர்வு தேவை.

- தீபன்
ஆற்காடு

கவிதைகள் அனைத்தும் பாராட்டுக்கரியதாய் அமைந்திருந்தன.

- புதுயுகம் செ.கோவிந்தராஜன்
திருச்சி

வாழ்க்கை என்பது மனத்தின் பந்தம். உணர்வின் பிம்பமே உறவாய்ப் பிரதிபலிக்கும். தாலிக்கயிறோ, கருகுமணியோ, மோதிரமோ இருமணத்தைக் கட்டிப் போடாது. 'ஆளுமை' இன்றைய சமுதாயமே, ஏன் பெண்களே நம்மிடம் நம்பிட மறுக்கும் உண்மை. உள்ளத்தின் உண்மையை உலகுக்கு உணர்த்திய லலிதா அவர்களுக்கு வாழ்த்துக்கள். சுப.வீ.உரை, புகலிட இலக்கியம் வரவேற்கத்தக்க - காலத்தின் தேவைகள்.

- விபாகை
சென்னை

பார்த்துப் பார்த்து தயாரிக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கங்கூட 'வீணே' என்று சொல்லாமல் ரசிக்கும்படியான சிந்திக்கத்தக்கதுமான படைப்புகள்.

- நவீன் குமார்
நடுவிக்கோட்டை

புகலிட இலக்கியம் - தொடர்கட்டுரை வரவேற்கத்தக்கது. சுப.வீ. உரை எழுத்தாக்கம் நன்று. ஆளுமை போன்ற சிறுகதைகளுக்காக 10 பக்கம் ஒதுக்க வேண்டுமா? இரண்டு மூன்று பக்கங்கள் சிறுகதைகளுக்கு, புரட்சிக் கதைகளுக்கு ஒதுக்கலாம்.

- துகள் வெங்கட்
வெங்கமேடு - கரூர்

ஆளுமை கதையில் சங்கீதாவின் பக்கம் சரி இருப்பது போன்ற இழையோட்டம். குற்றத்திற்குக் குற்றம் செய்வது பழிவாங்கல் என்ற தளத்தில் கிளம்புவது ஆகும். பழிவாங்கல் என்பது ஒரு தளத்தோடு நின்று விடுவதா?

- உ.அமரன்
வாழ்வாங்கி



படிப்பகம்

www.padippakam.com

கதவு தொடர்ந்து வருவது குறித்து மகிழ்ச்சி.

முனைவர். பசும்பொன்
தமிழ் வளர்ச்சித்துறை, விருதுநகர்

'ஒப்பந்தங்கள்' பிடித்திருந்தது. கதவு இயங்குகின்ற தளமும் பயணம் இயங்குகின்ற தளமும் மாறுபட்டதாய் இருப்பதை உணரமுடிகிறது. ஆனால், இரண்டுக்கும் நோக்கம் ஒன்றுதான். உங்களிடம் நாங்களும், எங்களிடம் நீங்களும் கொடுக்கவும் வாங்கவும் நிறைய இருப்பதை உணரமுடிகிறது.

சுரா - பயணம்
பெங்களூர்

தலையங்கம் எல்லாச் சிற்றிதழ்களுக்கும் உரிய நியதி. 'புகலிட இலக்கியம்' தொடர் புதிய இலக்கிய முகிழ்ப்பின் பரிமாணங்களைச் சொல்லும் என எதிர்பார்க்க வைக்கிறது. 'ஒப்பந்தங்கள்' மொழிபெயர்ப்பு யதார்த்த நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. சுப. வீரபாண்டியன் அவர்களின் உரை ஊடகங்களின் அரசியலை ஓரளவு அறிய வைத்தது.

- கே. புஷ்பராஜ்
கேப்பியார் - பரணியறந்தலவிளை

குமுதத்தில் வரவேண்டிய பாலச்சந்தர்தனமான சிறுகதையை (ஆளுமை) கதவில் பார்த்து அதிர்ச்சிக்குள்ளானேன். மீளாஅதிர்ச்சியில்

-கு. பாலசுப்ரமணியன்
அருப்புக்கோட்டை

ரவிகுச்சிமன்ச்சியின் 'ஒப்பந்தங்கள்' ஒரு முக்கியத்துவம் வாய்ந்த படைப்பு. அரங்குகளில் நிகழ்த்தலாம். இன்றைய சூழலில் இது அவசியம் உணர வேண்டியதும், உணர்த்த வேண்டியதும் ஆகும்.

- மேகவண்ணன்
புதியதடம்
இராமேஸ்வரம்

விலகிவரட்டும்... பெண்ணுக்கு இது சுதந்திரம். ஏன் வேறிடம். அது அவளுக்கு அவளே இடும் தன்மானப் புதைகுழி அல்லவா? வெறும் கழிவிரக்கம் மட்டுமே தொனிக்க 'ஆளுமை' என்ற வார்த்தையே தேவையில்லை தலைப்பாய். மறுபடியும் கதையின் முடிவில் அந்த நாயகி ஆளப்படுகிறாள்.

- ரெங்கா
- ஆழ்வார் குறிச்சி

லலிதா அவர்களின் ஆளுமை கதை இதழுக்கு சிறப்பு செய்கிறது. புகலிட இலக்கியம் மேலும் படிக்க ஆர்வம் உண்டாக்குகிறது.

- நாத்திக நந்தனார், த.த.இ.,
சென்னை

கதவின் ஆக்கங்கள் தரமானவை. சேகரித்து வைக்கக் கூடியவை. தலையங்கம் உண்மையானது.

- செ. கனகரத்தினம்
திரிகோணமலை, இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

# எசஎழுத்து

**(இதழ் 8 க்கான கடிதங்கள்)**

'அ-காலம்' மதிகண்ணனின் சிறுகதை படித்தேன். உருவத்திலும் உள்ளடக்கத்திலும் நடையிலும் கூட முற்றிலும் மாறுபட்ட ஒரு சிறுகதையாக இருக்கிறது. அவரவர் சம்மந்தப்பட்ட விஷயங்கள்கூட குறைந்தபட்ச ஞானத்தோடு உயிரினங்கள் உலவும் தன்மையை (மனிதனும்கூடத்தான்) வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார் கதாசிரியர். புத்தர் குறிப்பிட்டது போல 'மனிதன் பிறப்பதும் இல்லை; உயிரோடும் இல்லை; அவன் இன்னும் பிறக்காதவன்; இன்னும் இறக்காதவன்' என்னும் தத்துவத்தை இக்கதை சொல்லாமல் சொல்லிச் செல்கிறது.

- திலீப் நாராயணன்
விருதுநகர்

அச்சு நேர்த்தி. அழகான அட்டைப் படம். 'அ-காலம்' வித்தியாசமான அழகியல் உணர்ச்சியுடனான படைப்பாக்கம். மதிகண்ணன் கதைப்பின்னல் நல்ல ஓட்டம். குழுமனப்பான்மை தவிர்த்து படைப்புகள் நிறைந்தது என சொல்லும்படியாக 'கதவு' திறக்க வாழ்த்துகிறேன்.

- நவீன் குமார்
நடுவிக்கோட்டை

கதவு -08 இதழில் 'மாதிரியில்லா மொழி உலகமும் பிரக்ஞையில்லாக் கலகமும்' என்னும் தலைப்பில் திரு. யவுனிகா ஸ்ரீராம் எழுதிய கட்டுரையைப் படித்திட முயன்றேன். அதன் முதல் பத்தியைக்கூட என்னால் புரிந்து கொள்ள முடியாததால் தொடர்ந்து அதனை என்னால் படித்திட முடியவில்லை.

- சோதிப்பிரகாசம்
சென்னை - 49

மெத்தப் படித்தும், நேர்மையான பாதையை மறந்து, அளவின்றி நிறையத் தத்துவங்களை உபதேசிக்க முயற்சி செய்பவன் பின்பற்றத் தகுதியானவன் அல்லன். ஆனால், அதிகம் படிக்காத, நேர்மையான பாதையை விட்டு விலகாத, எதையும் நேர்மையுடன் செய்து அதிகம் பேசாதவனே பின்பற்றத் தகுதியானவன்.

-புத்தர்

சிந்திப்பவர்கள் மட்டுமே காலத்திற்கு ஏற்பத் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டு, புதிய பழக்கங்களை மிக இயல்பாக நடைமுறைக்குக் கொண்டு வந்து வெற்றி பெறுகின்றார்கள்.

-டயோவினியஸ்

ஒரு கருப்பைக்குள் திரும்பிச் செல்லும் தீவிர ஆர்வம் எனக்கில்லை. அது யாருடைய கருப்பையாக இருந்தாலும் சரி.

-ஊட்டி ஆலன்
(அமெரிக்க திரைப்படத் தயாரிப்பாளர். 1935-இல்)



படிப்பகம்

www.padippakam.com

## புதிய காற்று உள்ளே வர 'கதவு'களைத் திறந்து விடுவோம்.

மூடப்பட்ட கதவுகள் திறக்கப்பட வேண்டும். சிந்தனைக்கும் படைப்புக்கும் புதிய வாயில்கள் வேண்டும். அதனைத் திறக்கும் வகையிலேயே 'கதவு' ஜனவரி(2000) இதழ் வந்துள்ளது.

பல்வேறு புதிய மாற்றங்களுடன் எழுதுதல் மொழி, படைப்பு என்ற தளங்களில் புதிய புதிய வளங்கள் வேண்டும். அத்தகைய பிரக்ஞையும் புரிதலும்தான் தமிழை வளப்படுத்த முடியும்.

தமிழில் சிறு பத்திரிகைகள் மேற்குறித்த நோக்கத்தை ஈடேற்றும் வகையிலேயே வெளிவருகின்றன. இந்த வரிசையில் தற்போது 'கதவு...'

கதவு சுமார் ஐம்பது பக்கங்களில் தன் படைப்புகளைக் கொண்டுள்ளது. 'மாதிரியில்லா மொழி உலகமும் பிரக்ஞையில்லாக் கலகமும்' எனும் கட்டுரை புதிய மொழியில் சாத்தியப்பாடு குறித்த ஓர் அலசல். இன்னும் தெளிவுக்கும் புரிதலுக்குமான கட்டுரையாக வளர்க்கப்பட வேண்டும். 'புகலிட இலக்கியம்' பற்றிய தொடர், தமிழுக்குப் புதுவளங்கள் கிடைப்பதற்கான பங்கை அறிந்து கொள்வதற்கான தகவல்களின் தொகுப்பு. அவசியம் கருதிய தொடராக இதனைக் கொள்ள வேண்டும். 'இது ஒரு திரைப்பட விமர்சனம் (மட்டும்) அல்ல...' எனும் கட்டுரை 'வாட்டாக்குடி இரணியன்' எனும் திரைப்படத்தின் வருகை குறித்த அலசல். சாதியக் கட்டுமானத்துக்கு எதிராக வெடித்துக் கிளம்பும் புரட்சிக் கனல் 'இரணியன்'. இது ஏன் தமிழ்ச் சூழலில் அதிகம் கவனிக்கப்படவில்லை என்னும் கேள்வியை கட்டுரை எழுப்புகிறது.

மற்றும்

- ☐ செய்திகளை முன்வைத்த பேச்சு...
- ☐ கவிதைகள்...தேவதேவன்...யவுனிகா ஸ்ரீராம் என விரியும்
- ☐ புதிய இதழ்கள் அறிமுகம்
- ☐ நிஷ்டை நூல் அறிமுகம்
- ☐ அறியப்படாத தமிழகம் - திறனாய்வு என நூல்களின் விரிவு...
- ☐ மற்றும் அ-காலம் என்ற புதியகதை - புதிய கதைசொல்லல் என்ற பாங்கில் கவனிக்கும் எழுத்து...

இவ்வாறு பல்வேறு விஷயங்களைக் 'கதவு' தாங்கி வெளிவந்துள்ளது. -ஆதி

(ஆறாம்திணை இணைய இதழில் சிற்றிதழ் விமர்சனம் பகுதியில்)



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் சினிமாவில் ஓர் இடையீடு பிம்பத்தின் புனிதத்தைக் கட்டவிழ்த்தல்

-ஆத்மாநாம்

**"1885 ஆம் ஆண்டு லூமினர் சகோதரர்கள் முதன்முதலில் ஒளிரும் பிம்பங்களைக் காண்பித்தபோது பிறந்தது ஒரு புதிய கலை மட்டுமல்ல அப்போது மனித மூளையில் உணர்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஒரு புதிய அமைப்பு தோன்றியது".**

**(பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் - பேல பெலாஸ்)**

*சினிமா சமீபத்தில் புரட்டிப் பார்த்த தனது நூறு ஆண்டுகால வரலாற்றின் தொடர் ஓட்டத்தில் மனித குலத்திற்கு பல மேன்மையான விஷயங்கள் வாய்க்கப் பெற்றிருந்தும் அதன் குறைவளர்ச்சி குறித்த நினைவுகளையும் தன்னகத்தே சுமந்து கொண்டுதான் வந்துள்ளது. மேற்குறிப்பிட்ட பதத்தில் சினிமாவை ஒரு சமூக விஞ்ஞானக் கலையாக பலர் புரிந்து கொள்ளாததன் போக்காக இது நிகழ்ந்திருக்கக் கூடும். ஆய்வறிஞர்கள் காண மறுத்த ஒரு பொருளைத்தான் பேலபெலாஸ் தனது கடிதத்தில் இன்னும் வலுவாக சுட்டிக்காட்டுகிறார் 'மக்களின் மனோநிலையை, கருத்துக்களை உருவாக்கும் சினிமாவை மக்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதல்ல. மாறாக, துரதிருஷ்டவசமாக மக்களை அது பயன்படுத்துகிறது. சினிமா ஓர் மக்கள் கலையாக இருந்தும் அதுகுறித்த அறிவு, ரசனை அவர்களுக்கு நிராகரிக்கப் பட்டிருப்பதால்தான் சினிமா சக்தியின் முன் செயலிழந்து நிற்கிறார்கள்.' இதன் தொடர்ச்சியான பாதிப்புகள் தமிழ் சினிமாவையும் விட்டுவிடாமல் இல்லை. திரைப் படத்தின் மூலம் கட்டி எழுப்பப்பட்ட பிம்ப ஆளுமைகள் அதிகாரப் பீடங்களாக இறுகிப் போயுள்ள இன்றைய சூழ்நிலையில் மெய்யான கலாச்சாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு வியாபாரக் கலாச்சாரம் முன்னுக்கு வந்துள்ளது. ஆங்காங்கே சில ஒளிக்கோலங்கள் தோன்றினாலும் இருளின் வலை கிழித்து வெளிச்சம் கைவரப் பெறுவது இன்னமும் அசாத்தியமாகவே உள்ளது.*

*ஒரு அதிவேகப் பாய்ச்சலில் தமிழ் சினிமா சுயத்தை முற்றாக மறுதலித்து பின்னோக்கி நீச்சலடித்துக் கொண்டிருந்தபோது அபூர்வமாக ஒலித்த குரல்களும் உண்டு. அந்தக் குரல்வளைகளும் நெறிக்கப்பட்டுப் போனதன் மத்தியில் தலையை நீட்டிக்கொண்டு வந்தவர்களில் ஞானராஜசேகரனும் ஒருவர். தி.ஜானகிராமனின் மோகமுள்ளை தனது பயிற்சிக்கான முதல் வித்தாக அவர் தேர்ந்து கொண்டதுகூட வழமையான தமிழ் சினிமாவின் மாய்மாலங்களுக்கு அப்பாற்பட்ட விஷயந்தான். அளவில் சற்று பெரிய நாவலான இதன் மையம் திரைப்பட வடிவத்தில் கவனத்துடன் அணுகப்பட்டிருந்தது. பலரால் சிலாகிக்கப்பட்டு, வேறு சிலரால் விமர்சனத்துக்கும் உள்ளானது. இருந்தும் எழுத்து உருவாக்கும் அனுபவத்துக்கும் காட்சி உருவாக்கும் அனுபவத்துக்கும் உள்ள இடைவெளியைப் பேசி யமுனாராஜேந்திரன் போன்றோர் அதன் திரைப்பட*



படிப்பகம்

www.padippakam.com

முயற்சிக்காக பாராட்டவே செய்தனர். இந்திய ஆட்சிப் பணியில் தணிக்கை அதிகாரியாக தற்போது பணியாற்றிவரும் ஞானராஜசேகரன் இலக்கிய உலகிற்கு அறிமுகமானது எண்பதுகளில் 'வயிறு' என்கிற நாடகத் தொகுப்பின் மூலம். 'யானை குதிரை ஒட்டகம்' என உருவகநாவல் ஒன்றையும் சமீபத்தில் கொண்டுவந்துள்ளார். இலக்கிய உலகிலிருந்து சினிமாவிற்குள் பிரவேசித்தவர்கள் தங்களின் சுவடுகளை ஒருவாறு பதியவைத்துப் போனதின் பின்னணியில் ஞானராஜசேகரனின் வருகை புதிதல்ல என்றாலும் அவரது அடுத்தடுத்த படைப்புகள் எடுத்துக் கொண்ட களம் தமிழ் சினிமாவிற்கு முற்றிலும் எதிர்மறையான அம்சம் என்பதால் அவரை நோக்கி கவனத்தைக் குவிப்பது தவிர்க்க முடியாததாகிறது. தனது இரண்டாவது படைப்பான 'ஒரு கண் ஒரு பார்வை' எனும் குறும்படத்தின் மூலம் தீண்டாமையின் வேர்கள் எங்கும் நீக்கமற கிளைத்துப் பரவியிருப்பதையும், சாதியத்தின் கரை அரசு நிறுவனங்களிலும் படிந்து கிடப்பதையும் சொல்ல முயன்றுள்ளார். தனம் என்ற சிறுமியின் கண் பறிக்கப்பட்டதில் முதல் காரணியாக சாதி செயல்பட்டதைச் சொல்லிய நிகழ்வு அது. அரசு நிறுவனத்துக்குள்ளிருந்தே அதனை எதிர்த்த குரலாக அது வெளிப்பட்டது சற்று ஆச்சர்யமானதும்கூட. இந்த இரண்டு பிரதிகளுமே இந்திய அளவிலான அங்கீகாரத்தைப் பெற்றது ஆறுதலான விஷயமாக இருந்தும், அவரின் குறும்படம் இன்னும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட முடியாமல் முடங்கியே கிடக்கிறது. இந்நிலையில்தான் அவரது மூன்றாவது படைப்பான 'முகம்' வெளிவந்தது.

## II

**"குற்றத்தை எதிர்கொள்வதற்கான ஒரே வாய்ப்பு. அதை உணர்ந்துவதிலும் ஏற்றுக் கொள்வதிலும்தான் இருக்கிறது. இன்று நம்மிடையே நிலவும் குற்றத்தை நம்முடைய பொதுக்குற்றமாக ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை. அதன் பிறகுதான் அது நம்மிடையே மாற்றத்தை ஏற்படுத்தும்."**

**-ஸிக் ஃப்ரீட் லென்ஸ் ( நிரபராதிகளின் காலத்தில் மாணவன் )**

முகம் திரைப்படத்தில் காட்சிகளில் பிடிபடும் முகம் குறித்த விசாரணை எதைத்தூண்டுகிறது. படத்தின் இயக்குநர் பேட்டிகளில சுட்டாததும் நமக்கு சட்டென நினைவுக்கு வந்துவிடுவதும் தமிழக வரலாற்றில் கவர்ச்சியான பிம்பமாக உறைந்து போய்க் கிடக்கிற நடிகர் / முதலமைச்சர் M.G.R. குறித்த அதீத புனைவுகள்தான் அது. படத்தின் பிற்பாதி காட்சிகளும் இதனை மேலும் உறுதிப் படுத்தவே செய்கின்றன. அதன் நீடித்த சக்திக்கு தமிழக மக்கள் தந்த விலை அநேக ஆய்வாளர்கள் அறியாத ஒன்று. இனிவரும் காலங்களில் மாற்றுக் குரலை விரும்பும் எந்த ஒரு சினிமா கலைஞனுக்கும் தொடர்ந்த சாபமாகவே அது இருந்துகொண்டிருக்கும். வரலாற்றுரீதியான எந்த ஒரு வளர்ச்சிக்கும் வரலாற்று ரீதியான விழிப்புணர்வு இருக்கவேண்டும். 'எம்.ஜி.ஆர்.கள் உருவாகும்போது அதைப்பற்றி முன்கூட்டி எச்சரிக்கும் அமைப்பு இல்லாத சமூகங்களில் எம்.ஜி.ஆர்.கள் உருவாவதும் இயல்புதான்.' இதற்கான



படிப்பகம்

www.padippakam.com

மீட்சிகூட கட்டியெழுப்பப்பட்ட பிம்பங்களின் புனிதத்தை உடைப்பதற்கான முன்நிபந்தனையால் மட்டுமே சாத்தியம். சமகால சமூக வாழ்வின் பிரச்சினைகளை பிரதிபலிக்காத எந்த ஒரு கலைக்கும் அதனளவில் முழுமையிருக்காது. அந்தவகையில் ஞானராஜசேகரன் கையாண்டிருப்பது நாம் எதிர்கொள்ளும் நிகழ்கால சிக்கலைத்தான். ஆம்! சினிமா என்கிற சாதனத்தை துஷ்பிரயோகம் செய்ததால் உருவான கலாச்சாரச் சிக்கல் அது. மற்றபடி எம்.ஜி.ஆர்.கூட முகம் வைத்துத்தான் தன்னுடைய செல்வாக்கைக் கட்டியமைத்தார் என்று சொல்லிவிட முடியாது. அவரது ஒட்டுமொத்த உடலை ஒரு காட்சிப்பொருளாக பயன்படுத்தியது மட்டுமல்லாமல் கை, கால் என அவயங்களின் செயல்பாடுகள் மூலமாகவும் தனது பிம்ப ஆதிக்கத்தை விரிவுபடுத்திக் கொண்டார். படவசனங்களில்கூட அவரின் சிவந்த நிறம், திரண்ட மார்பு, முகவசீகரம் என்கிற சிலாகிப்புகள் இடம் பெற்றன. குறிப்பாக காமடியர்கள் இதனைப் பேசினார்கள். அதன் பிறகு முகம் என்பதற்கு பிரத்தியேக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய காலகட்டத்தை உணர்த்தும் தனது திரைப்படங்களில் முகத்தை close-up இல் நேராகக் காட்டும் காட்சிகளை அமைப்பதில் கவனம் செலுத்தினார். இது பார்வையாளர்கள் மத்தியில் அவரது முகம் உளவியல் ரீதியில் இறுக்கம் காண பெரிதும் காரணமாக அமைந்தது. நமது வாழ்நாளின் அநேக நேரங்களில் முகம் என்ற கருத்தமைவை தாங்கி வாழ நேர்ந்ததற்கு அது ஒரு ஆளும் கருத்தியலாக நிலைபெற்று விட்டதையும் காரணமாகக் கூறலாம். ஆயினும் அதற்கான முடிவுகள் ஒரே வழியில் பெறப்பட்டதாகச் சொல்லமுடியாது.

சமீபத்தில் வெளியாகி பல வாரங்கள் ஓடிய TITANIC படக்கதாநாயகியின் முகம் சர்வதேசத் தன்மை வாய்ந்த முகமாகப் பேசப்பட்டது. அது என்ன சர்வதேசத்தன்மை? இதற்கான எளிமையான சூத்திரங்கள் அழகிப்போட்டிகளில் தங்கியிருந்தாலும் விளம்பரப்படுத்தலுக்கும், வியாபாரப்படுத்தலுக்கும் தேவையான ஒரே வார்ப்புகளைக் கொண்ட உலக ஏற்புக்குரிய உடல் +முகம் இதில் கோரப்படுகிறது. திரைத்துறையில் நாம் காணும் நட்சத்திர ஆதிக்கம் என்பதுகூட மக்கள் மனதில் முகம் குறித்த கருத்தியல்களை வடிவமைப்பதில் முக்கிய காரணியாகச் செயல்படுகிறது. தமிழக அரசியலிலோ எம்.ஜி.ஆர்., அண்ணா, கருணாநிதி முகங்களுக்குப் பிறகு இப்போது ரஜினி முகம் பேசப்படுகிறது. திரையில் இளைஞர்களின் அண்ணனாக வலம்வரும் இவர் மேடைகளில் தீர்க்கதரிசி முகத்துடன் கவனமாகவே தோன்றுகிறார். இந்திய அரசியலில்கூட நேருமுகம், இந்திராமுகம், ராஜிவ்முகம் (சிதைவுக்குப்பின் அதிகமாக முன்னிறுத்தப்பட்டது) என வலம் வந்த பிறகு இன்றைய நிலையில் பி.ஜே.பி. ஒரு வாஜ்பாய் முகத்தையும், (சமீபத்திய தேர்தலில் நல்ல விலைக்குப் போனது) காங்கிரஸ் ஒரு சோனியா முகத்தையும் கொண்டு வந்திருக்கின்றன. இதில் உள்நாட்டு முகம், வெளிநாட்டு முகம் போன்ற சர்ச்சைகளும் சேர்ந்து கொள்ள.... இங்கு ஒரு கேள்வி எழுகிறது. ஆமாம்! இங்கு யாருக்குத்தான் முகமிருக்கிறது? ஒரு சர்வாதிகார ஆட்சியின் கீழ் முகம் கண்காணிக்கப்படுவதை, முகமே மனிதவதைக்கு ஆதாரமாகிப் போனதை 'ஹெயின்ரிச் போயில்' கதை ஒன்று



படிப்பகம்

www.padippakam.com

*கூறுகிறது. முகம் மட்டுமா? சிந்தனையும்தான் என்பதை 'ஜார்ஜ் ஆர்வெல்'லின் '1984' கூறியது. கௌதம சித்தார்த்தன் தனது நகர ஜீவியாக முகமற்றுப் போன எந்திரமனிதனைப்பற்றிப் பேசும் கதையில் முகமீட்சிக்கான உபாயமாக அவனது இயல்பான வேர்களைத் தேடிப் போகச் சொல்கிறார். அகதிப் போர்வைக்குள் முகம் இழந்து போனவர்களை பதிவு செய்கிறார்கள் புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள். முகம் மறுக்கப்பட்டு உடல்களாக மட்டுமே பெண்கள் அறியப்படும் ஆண்களின் உலகில் சொல்லாத சேதிகள் இப்படிச் சொல்கிறது.* **எனக்கு முகம் இல்லை / இதயம் இல்லை / ஆத்மாவும் இல்லை / அவர்களின் பார்வையில் / இரண்டு மார்புகள் / நீண்ட கூந்தல் / சிறிய இடை / பருத்த தொடை / இவைகளே உள்ளன.** *சரி! முகம் சினிமா இதில் எதைப் பேசுகிறது. மிருளான் சென் கூறியதுபோல சினிமா என்பதை அரசியல் துண்டுப் பிரசுரமாகவும், தகவல் சொல்லியாகவும் கொண்டால் முகம் திரைப்படப் பிரதி சந்தேகத்திற்கிடமில்லாமல் ஒரு தகவலைச் சொல்லிச் செல்கிறது. நமது அகவாழ்வுக்கும், புறவாழ்வுக்கும் தினம் தினம் நடந்தேறுகிற மோதல் பற்றியதுதான் அது. உள்முகத்துக்கும், வெளிமுகத்துக்கும் நடக்கும் சண்டையில் ஜெயிப்பதும் தோற்பதும் எவர்வசம் உள்ளது. எந்திர ரீதியான ஒரு அமைப்பில் ஆதாரமான உணர்ச்சிகள் புறக்கணிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. இதில் தெரிவது சமூகத்தின் மொத்த அரக்கத்தனம்தான். கண்ணுக்குத் தெரியாத அபாயத்தின் வெளிப்பாடான ஒரு நிகழ்ச்சியில் வெறும் பார்வையாளர் மட்டுமல்ல பங்கேற்பவர்களும்தான் என்பது தெரியாதது வெறும் அறியாமைதானா? அல்லது ஒரு சதியின் விளைவா?*

## III

## முகம் (திரைப்படக்கதை)

**சினிமா மேக்கப் மேன் முத்தண்ணன் வீட்டில் தங்கியிருக்கும் ரங்கனுக்கு அவனது முகத்தின் காரணமாக எதிர்காலம் மறுக்கப்படுகிறது. படத்தின் முற்பாதிவரை படிப்படியான நிகழ்வுகளாகக் காட்டப்படுகிறது. நாடக அரங்கில் திறமையிருந்தும் முகம் மறுத்து வெளியே அனுப்பப்படுகிறான். ராணுவ ஆள் எடுப்பிலும் அவன் கம்பீரத்தைத் தளர்த்தும்படியான அதே மறுப்பு. கோஷம் போடும் முகங்களுக்கிடையேகூட அவனுடைய முகத்துக்குத் தேவையில்லை. ஆதரவுச் சோறிடும் பெண்ணுக்கும் தனிமுகம் தேவைப்படுகிறது. முத்தண்ணன் கொண்டுவரும் சினிமா சான்ஸும் அவனுடைய நிஜமுகத்தின் காட்சி ரூபத்திற்குத்தான் என்றாலும் திரையில் அந்த முகமும் அடித்துத் துவைக்கப்படும்போது, அவனுடைய முகமே அவனுக்குத் தேவையில்லாமல் போகிறது. கையில் கிடைக்கும் ஒரு முகமூடியின் உதவியால் ஒரு பொய்முகம் புனைந்து ஒரு *SUPER HERO* ஆகிப் போகிறான். ஆனால் கடந்த காலம் அவனை அத்துடன் விடுவதில்லை. பெயர்கூட இல்லாமற் போன ரங்கனை குற்ற உணர்வுகள் நமைச்சல்களாக அரித்தெடுக்கிறது. போலியான வாழ்க்கைச் சூழல்களுக்கிடையே அவன் நிம்மதியின்றித் தவிக்கின்றான். எல்லாம் இருந்தும் அவனிடம் இயல்புதான் இல்லாமல் போகிறது. முகமூடியைக் கிழித்தெறிந்து**



படிப்பகம்

www.padippakam.com

**விட்டு நிஜமுகத்துடன் வரும் ரங்கனை சமூகம் மறுபடியும் குப்பையை நோக்கி வீசுகிறது. இனி சமூகத்தை எதிர்கொள்வதற்கான ஒரேவழி பொய்முகம் புனைந்து வாழ்வதுதான் என்ற முடிவுக்கு வருகிறான். சமூகம் அவனை நிமிர்ந்து பார்க்கிறது.**

*முகம் திரைப்படம் ஒரு கவித்துவமான காட்சிகளையும், சிந்தனா ரீதியான காட்சிகளையும் கொண்டதாய் கண்முன்னே விரிகிறது. படத்தின்* **TITLE** *காட்சிகளே ஒரு ஆரோக்கியமான சமூகத்தில் பலவித முகங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டிய தேவையைக் கோரி விதம் விதமான முகங்களை திரையில் நிரப்புகிறது. ராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் இடத்தில் ரங்கன் மறுக்கப்படுவதும் நமக்கு முன் கூட்டியே ஒரு காட்சியின் மூலம் உணர்த்தப்படுகிறது.* **SELECTION OFFICER***ன் முகத்துக்கு ஒரு* **CLOSE UP** *வைக்கப்படுகிறது. அந்த முகம் விசேஷமாக அழகுபடுத்தப்பட்டிருக்கிறது. முகத்தை அழகுபடுத்திக் கொள்வதில் விசேஷ கவனம் கொணடுள்ள* **OFFICER** *ரங்கனை முகம் வைத்து* **REJECT** *செய்யப் போகிறார் என்பதைத்தான் அந்தக் காட்சி சொல்கிறது. அதற்கடுத்த காட்சியும் அழகு குறித்த விசாரணைதான். 300 வருட பாரம்பரியம்* **TV** *யில் பெருமையாக ஓடிக் கொண்டிருக்கிறது. சார்லஸ் டயானாவின் திருமண நிகழ்ச்சி. அழகும் அழகும் மட்டுமே இணை சேர்ந்த நிகழ்ச்சி அது. அதனை கரைத்துக் கொண்டு ரங்கன் கைப்பம்பினை அடிக்கும் சத்தம் மேலோங்குகிறது. அது பசியின் சத்தம். அழகை வைத்து முகம் மறுத்ததால் விளைந்த பசியின் சத்தம். இருகாட்சிகளும் மாறி மாறி காண்பிக்கப்பட்டு பார்வையாளனை ஒரு மூன்றாவது உண்மையை நோக்கி உந்துகிறது. அந்த அரசியல் கட்சியின் கொள்கை விளக்க மாநாட்டிற்குக்கூட ரங்கன் மறுதலிக்கப்படும் போது உள்ளீடாக இந்தக் குரல்தான்.* **'முகம் வைத்து அரசியலை பிடித்த கட்சிக்கு கோரமுகங்கள் தேவையில்லை'**

*மற்றபடி படத்தில் இடம் பெறும் அந்த தீப்பிடல் காட்சி அதீத கற்பனைத் தன்மையுடன் படைக்கப் பட்டருப்பதும் வேண்டுமென்றே செய்யப்பட்ட உத்தியாக இருக்க வேண்டும். படத்தின் இயக்குநருக்கு சினிமா உருவாக்கிய (குறிப்பாக தமிழகத்தில் என்று சொல்லலாமா) பார்வையாளர்கள் - ரசிகர்கள் - மந்தைகள் போன்றோர் சமூகத்தில் முகம் பார்த்து மதிப்பளிக்கும் மனிதர்களின் முன்மாதிரிக் குழுக்கள் என்ற எண்ணம் இருக்கலாம். அதனால்தான் கொஞ்சம் நம்பமுடியாத தன்மையுடன் அந்தக் காட்சி படமாக்கப் பட்டிருக்கிறது. அதுகூட நாம் வாழும் காலத்தில் ஒரு முக்கிய கலையின் பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அந்தக் கலையைச் சீரழிவின் பக்கம் நகர்த்தியதை, மனித சமூகத்தை பிம்ப ஆதிக்கத்துக்கு அடிமையாக்கியதை நையாண்டி செய்யும் விதமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அதையெல்லாம் மீறியும் இந்தக் காட்சி திரைப்படத்தில் ஒரு கவித்துவத்துடன் விரிகிறது.*

*திரையில் தெரியும் ரங்கனின் முகம் பார்த்து பார்வையாளர்கள் கோபத்துடன் கூச்சலிடுகின்றனர். திரைமுகத்தைக் கிழித்து தீவைக்கின்றனர். கிழித்துக் கொளுத்தப்பட்ட முகம் பேசிக் கொண்டிருக்கிறது. ஒரு முகம் அழிக்கப்படுகின்றது அந்த முகமோ தனது அழிவின் இறுதிவரை தனக்கான நியாயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறது. ரங்கனின் நிஜஉருவம் அடித்துத்*



படிப்பகம்

துவைக்கப்படும்போது திரைமுகம் வாதாடிக் கொண்டிருப்பதாகக் காட்சி விரிகிறது. கொஞ்ச நேரத்தில் நிஜமும், நிழலும் துடைத்தெறியப்படுகின்றன. இளையராஜாவின் இசையும் ஸ்ரீராமின் ஒளிப்பதிவும் இதயத்தைக் காயப்படுத்திச் சென்ற இடம் அது. மதில் மேல் பூனையல்ல படைப்பாளியின் பணி. அவன் தான் வாழும் காலத்தில் சமகால அரசியல், கலாச்சாரப் பிரச்சனைகளை தனது படைப்புகளின் ஊடாக எதிரொலிப்பும் செய்ய வேண்டும். ரங்கனின் முகமாற்றம்கூட செயற்கையாக நவீன மருத்துவத்தின் மூலம் மாற்றியமைத்திருக்க முடியும். காட்சியின் ஜோடனைகளால், தர்க்கங்களால் படத்தின் இயக்குநருக்கு இயற்கை குறித்த ஒரு சாய்வு இருப்பதால்தான் அதுவும் தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் ரங்கனின் முகத்தை ஒருவித மாயாஜாலத் தன்மையோடு புரட்டிப்போடுகிறார். இந்த முகம் மட்டும் வேறாயிருந்தால், சமூக ஏற்புக்குரிய அந்தமாதிரி முகச்சாயலைக் கொண்டிருந்தால் .... ஒரு நவீன நாடகப் பிரதியை ஒத்ததான இதன் வடிவமும் கவனமாகத்தான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க வேண்டும். கோதார் படங்கள் பலவும்கூட ஆய்வுக் கட்டுரைத்தன்மையுடன்தான் அமைந்திருக்கின்றன.

அடுத்ததாக முகம் திரைப்படத்தின் பிரதான இணை அம்சமாகக் குறிப்பிட வேண்டியது இளையராஜாவின் இசை. நெஞ்சைப் பிழியும் அந்த வயலின் இசை ஏற்படுத்திச் சென்ற உணர்வுகள் நீண்ட நாட்கள் மனதில் கனத்துக் கொண்டே இருக்கும். பிரேம் - ரமேஷ் மிக அற்புதமாகக் குறிப்பிடுவார்கள் "இந்திய இசைக் கலைஞர்கள் பலர் செயல்படும் பரப்பும் இளையராஜா செயல்படும் பரப்பும் வேறுவேறானது. தனித் தனியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக அவர்கள் செய்ததை இவர் இரண்டரை மணிநேர திரைப்படத்தை ஒரு சாக்காகக் கொண்டும், ஒரு நான்கு நிமிடப் பாடலை ஒரு சாக்காகக் கொண்டும் ஒரே தளத்தில் செய்து முடித்து விடுகிறார்." ஒரு சமூகத்தில் மிக ரகசியமாக சாத்தியப்பட்டிருக்கும் ஒரு சாதனையாக இதனைக் கொள்ளலாமா? P.C. ஸ்ரீராமின் ஒளிப்பதிவும், இப்படியான ஒரு முயற்சியில் அவரின் இணைவும் படத்தினை எவ்வளவு அழகாக விசாலப்படுத்திச் செல்கிறது. ஒரு நவீன சிறுகதை - நாடகம் போன்று தோற்றமளிக்கும் பிரதியை திரைப்பட வடிவமாக மாற்றுவதில் நிறைவளித்துள்ளார் இயக்குநர். படத்தின் இன்னொரு முக்கிய பங்களிப்பான நாசர் குறித்தும், அவரது நடிப்பு குறித்தும் விரிவாகச் சொல்வதைவிட தேடல் மிகுந்த மனிதராக என்றைக்கோ பயணத்தைத் துவக்கிவிட்ட அவர் தமிழ் ஊடகச் சூழலில் மாற்றுக் குரல்களில் ஒன்றாக பரிணமித்துக் கொண்டிருக்கிறார் என்பதை முகம் எளிதாகச் சொல்லிச் செல்கிறது.

## IV

**இறுதியாகச் சில கேள்விகளும் ஆதங்கங்களும்:**

இன்று உலகில் உள்ள பல்லாயிரக்கணக்கான முகம் மறுக்கப்பட்டு அதன்வழி குற்றவுணர்வுக்கு ஆட்பட்ட மனிதர்களுக்காக பேசப்போன படம் அதன் இறுதியில் அவர்களை மீளாத வீழ்ச்சிக்குள் தள்ளிவிடுவதுதான் மிகப்பெரிய சோகம். அங்கவீனர்களின் பிரச்சனைகளை எடுத்துக் கொள்ளும் எந்தவொரு பிரதியும் அவர்களைப் பார்வையாளர்களாகக் கொண்ட வடிவ - உள்ளடக்கத்தைக்

www.padippakam.com

கொண்டிருக்க வேண்டுமென்பது அவர்களின் உலகு குறித்த அக்கறை - புரிந்து கொள்ளலாகத்தானே இருக்க முடியும். இந்தப் பொய்யான வாழ்க்கை மதிப்பீடுகளில் வெந்து மடியும் மனிதர்களின் மத்தியில் இன்னமும் முத்தண்ணன்கள் வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறார்கள். போலியான முகங்களுக்காக வாழ்ந்து, வாழ முடிவெடுக்கும் ரங்கன் முத்தண்ணனுக்காக வாழ்ந்திருக்க வேண்டாமா? அந்த எரியாமல் தப்பிய முகமூடியும் நம்பிக்கையில்லா உலகத்தைத்தானே சுட்டுகிறது. ஒருவேளை முகமூடி எரிக்கப் பட்டிருந்தால் அது அந்த சமூகத்துடனான எதிர் நீச்சலாகத்தானே இருந்திருக்கும். தீர்வு சொல்வதல்ல கலைஞனின் பணி என்றால் படம் இப்படியான முடிவைக் கொண்டிருக்கிறதா?

கலைப்படைப்பில் எந்த ஒரு பிரச்சனையும் தீர்க்கப்படுவதில்லை - அது வாழ்க்கையில்தான் தீர்க்கப்பட்டாக வேண்டும் என்றாலும் அதனை நோக்கிய தூண்டல்களையும், சாத்தியக் கூறுகளையும் அந்தப் படைப்பு பேசவேண்டாமா? நிஜமுகத்தை தொலைத்து விட்டு பொன்முகம் (பொய்முகம்) அணியும் ரங்கன் இட்டு நிரப்பப் போகிற இடத்தை நிரப்ப நிறைய ஆட்கள் வருவார்கள். பஞ்சமில்லாமல். ரங்கனின் நிஜமுகத்துடனான உலகில் என்றுமே அவர்கள் வரமாட்டார்கள். ரங்கன் போன்றவர்கள் மட்டுமே நிரப்ப வேண்டிய இடம் அது. அவர்களும் அந்த உலகை விட்டுப் போய்விடுவதுதான் மனித வாழ்வின் நீடித்த சோகமாக தொடர்ந்து கொண்டு இருக்கிறது. ஜோஸ் வண்டேலுவின் 'அபாயம்' நாவலில் கீழக்கண்ட வரி வருகிறது. 'முதல் நாள் ரயில்களின் சத்தத்தில் தூங்க முடியாத நோயாளிகளுக்கு அடுத்த நாள் அந்தச் சத்தம் கேட்பதே இல்லை.' கடைசியில் ரங்கன் எல்லா மனிதர்களையும் போல சாதாரண மனிதனாகிப் போவது இப்படித்தான். இனி ரங்கனுக்கு நமைச்சலும், அரிப்பும் இருக்கவே இருக்காது.

படத்தில் இப்படி ஒருகாட்சி வருகிறது. ரங்கன் இயக்குநரிடம் விவாதிக்கும் காட்சி அது. ஒரே மாதிரியான கதைகள் - விஷயங்கள் - படம்பிடிக்கும் முறை -கதை சொல்லும் முறை - இருட்டிற்குள் பார்வையாளர்களை வைத்திருத்தல் - கனவைக் காசாக்குதல் என நீளும் ரங்கனின் வாதமும் அவர்களின் விசித்திரமான பார்வையால், பதில்களால் நிலைகுலைய அதன் ஊடாக ஒரு காட்சி. இதுவரையிலான இயக்குநர்கள், அவர்களின் இதுவரையிலான சினிமாக்கள், அதனை மாற்ற நினைத்த - எதிர்கொள்ள நினைத்த ஒரே ஒரு நபர்கூட எழுந்து கொள்ள அந்த நாற்காலி வெறுமையாக விடப்படுகிறது. அதில் அமரப் போவது யார்? ஆண்டாண்டு காலமாக அந்த நாற்காலி நமக்காகத்தான் விடப்பட்டிருக்கிறது.

**செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் யாவும் செய்ய முடியாதவை என்று முதலில் பலரால் நிராகரிக்கப்பட்டவைதான்.**

**- கார்லைலஸ்**



படிப்பகம்

www.padippakam.com

## அடையாளம் - I

அவள் பெயர்
சொல்லி
யார் என்று கேட்டாய்

உன் பெயர்
சொல்லி
யார் என்று கேட்டான்

என் பெயர்
சொல்லி
யார் என்றிருக்கக் கூடும்

யாரேனும்
யார் பெயரைச்
சொல்லி
யார் என்று
சொல்ல
யாரிடமும் இல்லை
அடையாளம்
அல்லது
யாரை யார் என்று சொல்ல

-ஹவி

## அடையாளம் - II

இவரைக் காட்டி
அவன்
எப்படி தெரியும்
என்ற பொழுது
தயக்கம் கொண்டு
அங்கு இங்கு அது இது
என ஏதேதோ
சொல்ல ஆனாலும்
கூடவே ஒரு கேள்வி
மனிதனை மனிதன்
தெரிந்து கொள்ள
பீடிகை என்ன தேவை.
இன்னாரை இதற்கென்றும்
இவ்விதம் என்றும் எத்தனை
யெத்தனை வழிகள்
தேவை என்பது
ஆச்சர்யம் வர
எதுவுமற்று அவர் இவனற்று
நம்மை நாம் ஆக
சந்திக்கப் போகிறோம்
என்று இனி

-ஹவி

0 0 0

இரட்சிக்கும் இயேசுவே
ஆட்டை இறக்கி விடாதீர்
தயாராய் கசாப்புக் கடை!

-பொன்.குமார்

□

கரைவது விதி
காற்றிலோ நெருப்பிலோ
கற்பூரம்!

-பொன்.குமார்

□



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலை இறையியல்

**-கே.ஜேக்கப் அமல்ராஜ்**

உலகெங்கும் கிருஸ்தவர் தன்னைப் புதிதாக புரிந்துகொள்ள, புனைந்து கொள்ள முயலும் மாற்றுச் சிந்தனையின், செயல்பாட்டின் இன்னொரு பெயரே விடுதலை இறையியல்.

குற்றமற்ற அந்த குழுக்களின் இரத்தம் விண்ணோக்கி எழுப்பும் கூக்குரல்களே புரட்சியின் அடிநாதம். கோயிலை வணிகக் கூடாரமாக்காதே என சாட்டையெடுத்து அடித்து விரட்டிய இயேசு ஆதிக்க வர்க்கத்தை எதிர்த்து ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட இஸ்ரவேல் என்ற பரந்துபட்ட அடிமைச் சமுதாயத்தை மீட்பதற்காகவே வந்தவர் என்ற வரலாற்றுப் பேருண்மையை, எண்ணற்ற ஆண்டுகளாக என்நெஞ்சகத்தில் கனன்று கொண்டிருந்த மதம் பற்றிய ஆய்விற்கும் மதத்திற்குள்ளிருந்தே மக்களின விடுதலைக்கான சக்கதிகளை திரட்ட முடியும் என்ற நம்பிக்கைக்கும் பாலமாக, கிறிஸ்தவ இறைப்பணியாளர் மூவர் எழுதிய கட்டுரைகளும் அறிஞர் இருவர் எழுப்பிய விவாதங்களும் 'நிகழ்' தொகுப்பிலிருந்து திரட்டி மக்களின் பார்வைக்கு சமர்ப்பித்த கோவை ஞானி அவர்களின் சேவையை தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

மூன்றாம் உலகநாடுகளில் காலனியாதிக்கத்தை எதிர்த்தும் ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட கறுப்பு இன மக்கள் தங்களை ஒன்றுபடுத்திய மதத்திற்குள் இருந்தே புரட்சிக்கான கூறுகளை, மானுட விடுதலைக்கான பார்வையை, மனித நேய கலாச்சார பதாகையை உயர்த்திப் பிடித்து முழுமையான விடுதலைக்காக யாரெல்லாம் செயல்படுகிறார்களோ அவர்களோடு இணைந்து செயல்பட்டு சுரண்டலற்ற, சமத்துவ சமுதாயம படைக்க அறைகூவல் விடுக்கிறது விடுதலை இறையியல்.

இவ்வுலக கடமைகளை, தனது பக்கத்து வீட்டுக்காரனுக்கு, தான் வாழும் சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளைப் புறக்கணித்தவன் உண்மையான கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. கிருஸ்தவம் இரு வேறு தளங்களில் இயங்குகிறது. ஒன்று இயேசுவை வெறுமனே கடவுளின் குமாரனாக ஏற்றுக் கொண்டு வழிபாடுகள் ஆராதனைகள், பூசைகள் செய்கின்றவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு சமுதாயம் உலகவரலாறு பற்றி அக்கரையில்லை. இவர்கள் தங்கள் விசுவாசத்தில் வழிபாட்டில் நெருப்புக்கோழியைப் போல தலையைப் புதைத்துக்கொண்டு சிந்திக்க மறுப்பவர்கள்.

இரண்டு தச்சுத் தொழிலை மேற்கொண்ட சூசையப்பரின் மகனான இயேசுவை தொழிலாளர்களின் தோழனாக தங்கள் துன்பங்கள் தீர்வதற்கான நம்பிக்கை வெளிப்பாடாக காண்கிறார்கள் - வழிபடுகிறார்கள். மதத்துக்குள்ளிருந்தே மக்களின் விடுதலைக்கான சக்திகளை கையில் எடுக்கும் இவர்கள் இந்த முதாளித்துவ அமைப்பு முறை மாறினால்தான் ஒடுக்கப்படும் மக்கள் வாழ்வு பெறமுடியும் என்பதால் தொழிலாளி வர்க்கத்தின் பேராயுதமான மார்கசீயத்தையும் உள்வாங்கி சிதைந்த மானுட மீட்புக்கான போராட்டத்தை முன்னெடுத்து நடத்தி வருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் விடுதலை, காலனி விடுதலை இதுவே சற்று மாறி தமிழ் தேசிய விடுதலை, கருப்பு இன விடுதலை, அரசியல் பொருளாதார ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை, ஆணாதிக்க விடுதலை இப்படி பல்வேறு கூறுகளாக சிதறிக் கிடக்கும் விடுதலை இறையியல் விமர்சன மனநிலையோடு சிந்திப்பதும் கேட்பதும் விவாதிப்பதும் குறுகிய பார்வையல்ல. மாறிவரும் உலகில் தேவையான விடுதலைக்கான புரட்சியின் கூறுகளே.

இன்று விடுதலை இறையியல் கிறித்தவ வட்டத்திலே நிச்சயமாக சலனத்தை உருவாக்கியுள்ளது. ஒன்று இதை எதிர்க்க வேண்டும் அல்லது ஏற்க வேண்டும். இனி நடுநிலை வகுக்க முடியாது என்ற ஒரு பாதிப்பை இது ஏற்படுத்தியுள்ளது.

யாவே கடவுள் எகிப்தியரால் ஒடுக்கப்பட்ட இஸ்ரவேலரின் குரல் கேட்டு அவர்களை எல்லாவித அடிமைத்தனங்களிலிருந்தும் விடுவித்தது நிகழ்வாகும். மானுட விடுதலைக்காக மனு உரு தரித்த கடவுளின் குரல் கேட்டு மீண்டும் சமுதாய மாற்றத்துக்காக அர்ப்பணிப்பதின் விடுதலையே இறையியல்.

அறிவியல் கண்டுபிடிப்புகளை, பூமி உருண்டை என்று சொன்ன அறிஞர்களை புறந்தள்ளிய மதம் மீண்டும் ஒரு ஆய்வுக்கு, வேள்விக்கு தன்னை தூசிதட்டி மானிட விடுதலைக்காய், மனித நேயக் கலாச்சாரத்துக்கு குரல் கொடுப்பது என்றால் பாராட்ட வேண்டியது, வரவேற்க வேண்டியது நமது கடமை. மார்க்சியம் நமது பொது எதிரி என மதங்கள் தோள் தட்டும்போது மார்க்சியத்தை உள்வாங்கி விஞ்ஞானப் பூர்வமான விடுதலைக்கான கூறுகள் மதத்திற்குள் இருந்தே கிளம்பும் என்பது சிறிது அபத்தமாக இருந்தாலும் வரவேற்கப்பட வேண்டிய புதிய சிந்தனை. கூர்மைப்பட்ட நிலையில் நம்மை வந்தடைந்த இவ்வாயுதத்தை துருப்பிடிக்க விடக்கூடாது.

1988 - இல் கிரேக்க நாவலாசிரியர் நிக்கலஸின் நாவலை 'இயேசுவின் கடைசி சோதனை' என்ற பெயரில் திரைப்படமாக்கிய இயக்குனர் மார்ட்டின் ஸ்கோர்ஸிசேனின் 'தேவ தூஷணமா கருத்துச் சுதந்திரமா' என்ற மிகப் பெரிய சர்ச்சைக்குரிய திரைப்படம் காட்டிய புதுமையான மாற்றுச் சிந்தனைகள், இயற்கையான மானுட வாழ்க்கையின் படிமங்களாக வெளிப்படும்போது பிரமித்துப் போனேன். டேவிட் சித்தையாவின் பங்கு வித்தியாசமாக இருந்தாலும் எதார்த்தமானதே. புத்த இராமாயணத்தில் தந்தையின் சொற்கேட்டு இராமன் இலக்குமணன் மற்றும் சீதையுடன் காட்டுக்கு ஏகுவதும் 14 ஆண்டுகள் கழித்து திரும்ப பட்டமேற்பதும் உள்ளன. இராம, இராவணப் போரோ சீதையைத் தூக்கிச் சென்றதோ அங்கில்லை. எதார்த்தமான இயேசுவின் கடைசிச் சோதனை போன்றே புனைவுகளே வரலாறாகிய கொடுமை வரலாற்றின் பக்கங்களில் சிதறிக் கிடக்கின்றன.

எந்த மதத்தைப் பயன்படுத்தி அச்சுறுத்துகிறார்களோ அந்த மதத்துக்குள்ளிருந்தே எழுகின்ற விடுதலை கீதங்கள் இம்மண்ணிலும் மதத்திற்கு எதிராக மதத்துக்குள்ளிருந்தே புறப்படட்டும். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல அனைத்து மதத்தவரும் படிக்க வேண்டிய பாலபாடம். பரவட்டும் புதிய சிந்தனைகள். □□



படிப்பகம்

www.padippakam.com

# ...?...

கதை எழுத வேண்டும். மேசையில் பேப்பர். கையில் பேனா. எதை எழுத? கதை எழுத. சரி எழுதுவோம்.

கதையை சொல்லக்கூடாதா? ஏன் எழுத வேண்டும்? கதை என்றால் பேசு என்றுதானே அர்த்தம். அய்யய்யோ! தப்பு. அர்த்தம், பொருத்தம் எல்லாம் பார்த்தால் கதை எப்படி எழுதுவது. அது கட்டுரையாக அல்லவா போய்விடும்.

கதை என்றால் அம்மா சொன்ன கதைதான் நினைவுக்கு வரும். ஏழு அண்ணன்மார்களும் ஒரு தங்கையும். எத்தனை பேர்? ஏழு அண்ணன்கள். ஒரே ஒரு தங்கை. என்ன செய்தார்கள் என்று மங்கலான நினைவில் இருக்கிறது. சரி அம்மா ஏன் கதை சொன்னாள். பாட்டி என்னாச்சு. பாட்டிதானே நிறைய கதை சொல்வாள். பாட்டி இல்லையே என்ன செய்வது?

ஏதாவது செய்யலாம். இப்போது கதை எழுதலாம்.

'ஒரே ஒரு ஊரிலே....' வேண்டாம் வேண்டாம்.

ராஜா ராணி கதை. வேண்டாம் வேண்டாம்.

'காலை வானம் செக்கச் செவேரென்றிருந்தது. பறவைகள் கானம் பாடின.'

ஹலோ! கதை எழுதுங்க.

சரி சரி கதை எழுதுவோம்.

'அவன் இடுப்பிலிருந்த ரிவால்வாரைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்...'

டேய்! நாசமாப் போறவனே நல்ல கதையா எழுதுடா.

சரி சரி. நல்ல கதை எழுதுவோம்.

'அழுது அழுது அவள் கண்கள் வீங்கியிருந்தன. கன்னத்தில் உப்பு நீர்க் கோடுகள்.'

நிறுத்து. நிறுத்து. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி பெண்களை அழ வச்சுக்கிட்டே இருப்பீங்க.

ச்சே போங்கப்பா. இப்படியே ஒவ்வொண்ணுக்கும் சொல்லிக்கிட்டே இருந்தா எப்படித்தான் எழுதறது. கொஞ்சம் யோசிச்சு எழுதுவோம். யோசிக்கலாமா? ...ம்...ம்...ம்...ம்...ம்...ம்.....

அட ஐடியா வந்திருச்சு. இப்ப ஆரம்பிக்கிறேன் பாருங்க.

'ஒளி வெள்ளமாக அந்த பறக்கும் தட்டு தரை இறங்கியது. அதன் கால்பட்ட இடம் தங்கமாக மாறியது. லேசர் கதவுகள் விலகியவுடன் ஆன்டெனா தலையுடன், கையில் மூளையுடன் வினோத மனிதர்கள் வெளிப்பட்டார்கள்.'

ஐய்யோ! இவனுக தொல்லை தாங்க முடியலையே. ஏன்டா பயமுறுத்துறே.

சரி சரி நிறுத்திட்டேன். மறுபடி யோசிக்க டைம் கொடுங்க.

இப்பப் பாருங்க.

'மழை இல்லாமல் அந்த மானாவாரிக்காடு வெடிப்பு விட்டிருந்தது. மாரிமுத்து கண்களில் நீரோடு பார்த்தான்.'



படிப்பகம்

www.padippakam.com

ஆமாடா! அவங்களைப் பத்தி எழுதி டாக்டர் பட்டம் வாங்கிருவீங்க. அவங்க எப்பவும் போல அப்படியேதான் இருப்பாங்க. கந்துவட்டிக் காரங்களை விட மோசமா ஆயிட்டீங்கடா.

சரிப்பா. எழுதலை. விடு. அடுத்த கதையை யோசிப்போம்.

'சிந்தனையின் வெளியில்லா வெளியில் பிரயாணித்து, புதிய பரிணாமம் பற்றியதான யௌருஷ பார்வையினூடாக அகாலத்தில் நிதானித்து....'

ஹலோ! ஒரு நிமிஷம். திரும்பவும் அத வாசிச்சு உங்களுக்குப் புரிஞ்சா எங்களுக்கும் கொஞ்சம் சொல்லுங்களேன்.

அதானே! புத்திசாலித்தனமா கதை எழுதினா உங்களுக்குப் புரியாமப் போயிருது. அப்பறம் என்னதான் கதை எழுதுறது? எத எழுதுனாலும் குறை சொல்றாங்க. என்ன செய்றது? எழுதி யார்ட்டயும் காட்டாம நாமளே வச்சுக்கலாமா? சேச்சே இதுக்கெல்லாம் பயந்துகிட்டு கதை எழுதாம இருக்க முடியுமா? சரி அப்படி கட்டாயம் எழுதித்தான் ஆகணுமா? கட்டாயம் எழுதி என்ன செய்யப்போறோம்.

எழுதறவங்கள்ளாம் எதுக்காக எழுதறாங்களோ அதுக்காக நாமளும் எழுதலாம். அப்படின்னா வித்தியாசம் தெரியாமப் போயிருமே. வித்தியாசப்பட்டு என்ன? ஏன் வித்தியாசப் படனும்?

ச்சே! இந்தக் கொடுமைக்குத்தான் ரெம்பப் பேர் எழுதாமலே இருக்காங்க போல. சரி நாம எழுதறதுன்னு தீர்மானிச்சுட்டோம். அதுலயும் கதை எழுதறதுன்னு. எழுதித்தான் ஆகணும். எழுதுவோம்.

இந்தக் கதையை உங்களுக்கு வழங்கவிருக்கும் மின்னலடிக்கும் வெண்மை மேனியைத் தரும் 'பன்' சோப் நிறுவனத்தினரின் சன்மானம் அடிக்கடி கண் முன்னால வருது. எழுதித்தான் ஆகணும். எழுதுவோம்.

-கு. பாலசுப்ரமணியன்

**பனிபெய்யும் நள்ளிரவில் முடிவில்**
**நீ எல்லோருக்குமானவனாகி விட்டாய்**
**அடிக்கடி சிலிர்க்கும் தேசத்தின்**
**ரோமக்கால்களினடியில் எழுதப்பட்டிருக்கிறது உனது பெயர்.**
**கொதிக்கும் நரம்புச் சூட்டிலிருந்து**
**தயாரிக்கப்படுகின்றன உனக்கான வீரவணக்கப் பாடல்கள்.**
**உன்னால் வல்லுறவு செய்யப்பட்ட**
**பெண்ணின் ஆசைகள் மக்கிப்போய்விட்டன.**
**உன்னால் விசாரணை செய்யப்பட்டவரின்**
**சடலங்களை நடுநிசியின் ஓலங்களோடு**
**ஏதேனும் கூரிய பற்கள் கிழித்துக் கொண்டிருக்கலாம்.**
**நீ மண்டியிட்டு பதுங்கியதன் அடையாளமாய்**
**மடங்கிக் கிடக்கின்றன புற்கள்.**

**-சுகுணா**



படிப்பகம்

www.padippakam.com

# ரெங்கா கவி

## கரணங்கள்

எல்லோரையும்
எல்லாவற்றையும் விமர்சித்தாகிவிட்டது.

வாசித்தாகி விட்டது.
தலைவர்கள் வந்து போகும் நாட்களில்
மட்டும்
தார் பூசிக் கொண்டு கண் சிமிட்டும்
சாலைகள்,

கண்க்குக் காட்ட
சீரமைத்த பின்னும்
எலும்பு துருத்திக் கொண்டு
மழிக்கப்படாத முகமாய்
மழைக்குப் பின்னும் மூக்கு
ஒழுகிக் கொண்டிருக்கும்
வீதிகள்,

சாஸ்தா பொங்கலில் ஆரம்பித்து
சபரிமலை வரை எதிரொலிக்கும்
ஒலி பெருக்கிகளின் கதிரியக்கம்,

காலை நேர பேருந்து பயணத்தை
ரசிக்க விடாத
சாலையோர மலங்கழிக்கும் முகங்கள்
பீடிச்சம்பளம் வாங்க விரையும்
சின்னக் கால்கள்
பேப்பர் பொறுக்கும்
ஊதுபத்தி விற்கும் 'பெரிசுகளும்'

ஜோ
மூக்குக் ச
பிரயத்தனப்ப
அவர்களது முப்
சுரண்டல் லா
செத்துக் கிடந்தியங்
நா
எழுத்
நீ
... ...
எல்லாவற்
விப
பிரபலப்
ஆ
பயிற்
முன் மொ
கவிதை... க
ப
வழி மொ
இத்தனை
எ
எ



படிப்பகம்

www.padippakam.com

# ...தைகள்

...ன்னா பை
...ன்னாடி சகிதம்
...ம் அறிவு ஜீவிகளும்
...ரிமாண கவலைகளும்
...டரி சுவரொட்டி
...க் கொண்டேயிருக்கும்
...கள்
...ாம்
... சொல்
... பால்
...யம்
...ழல்
...ாய்
...கிடு
...லிடு
... ... என்று
...யும் வாசித்து
...சித்து
... ஆயாச்சு.
...ாலும்
...யாளரே
...நீர்
...ந்தது போல
...விதை... கவிதை
...டும்
...யவில்லையே
...க்குப் பிறகும்
...னை.
...னில்.
...ம

## அச்சுப் பிழை

இருக்கட்டும்... ...
கழிவிரக்கம் தொடக்கம்தான் என்று
கணித்தாய்.
உள்வாங்கு எரிந்து
கவியாகு மடிந்து
என்றாய்...
அக்னிக் குழம்பு பூசிக் கொண்ட
ஆவேச உடம்பில்
எண்ணங்களும் எழுச்சிகளும்
இடித்துக் கொண்டு
சொல்லும் சுயமும்
முண்டியடித்து முன்வரிசை அமர
அமர
பொங்கியெழுந்தன
பொங்கிப் பொங்கி
ஆகாய கங்கை ஊற்றுக்கள்
மேடையெங்கும்... ...
இதெல்லாம் அப்போது...
நீ
சொன்னபடியே.
எப்போதிருந்தென்று சரியாகத்தெரியவில்லை-
பித்துப் பிடித்த அகம்
பூசிக் கொண்ட
அரிதார அங்கங்களில்
கழிவிரக்கங்கள் மட்டுமே
பீறிட்டு வருகின்றன
ஆர்ட்டீசியன் ஊற்றுகளாய்
இப்போதெல்லாம்.
பிழை பொறுத்து
கவி திருத்து
ஆசானே!



படிப்பகம்

www.padippakam.com

# கடந்த நூற்றாண்டின் கடைசிக் கவிதை

காலமற்ற காலத்தின்
அகால மார்பில்
வடுக்கள் மறையவில்லை.
வற்றித்தான் போய்விட்டது
உள்ளங்கை பிசுபிசுப்பில்
ஊறிய நதி.
விசும்பல்கள் ஒலிக்கும் யாமப் பொழுதுகளிலும்
தனிமைக் கணங்களிலும்
'விண்'ணென்று தெறிக்கின்றன
உன் புன்னகை வலி
இறக்கைகள் உதிர்ந்த தேவதைகளே
சிநேகிக்கக் கிடைக்கிறார்கள்
சாரமற்றதாயிருக்கிறது வாழ்க்கை.
சம்பிரதாயமாய் வரவேற்று வைப்போம்.
இந்த நூற்றாண்டு
எதை விழுங்கி வயிறு புடைக்கிறதோ?
எப்படியாயினும் என் இனிய சோதரி...
உன்னைப் பழகியும் இழந்தும் போன
கடந்த ஆயிரமாம் ஆண்டு
இன்னமும் இருக்கிறது
உன் முழங்கைத் தழும்புகள் போலவே.

-சுகுணா (01-01-2000)

□□□

மலையிடுக்குகளில் கசிந்துகொண்டிருந்தது
ஆதியில் புனையப்பட்ட பாடலொன்று.
பாடலில் தெறித்த விஷத்தால்
நீலம் பாரித்துக் கிடந்தது வெளி
விஷத்தின் போதையில் வெறியேறி
மயங்கிக் கிடந்தனர் மாந்தரெல்லாம்.
கைகோர்த்து நிகழ்ந்து முடிந்த ஆட்டமுடிவில்
குறிகளின் இடத்தில் கொம்புகள்
முளைத்தது எல்லோர்க்கும்.
பாடல்களால் தாக்கத் தொடங்கிய கூட்டத்தில்
தேடிக் கொண்டேயிருக்கிறேன்
புனையப்படாத பாடல்கள் பாடுவோரை
அவரே நம் சிநேகத்துக்குரியவர்.

-சுகுணா



படிப்பகம்

www.padippakam.com

# பன்னிரு கவிதைகள்

பன்னிரு பாட்டியல், பன்னிரு திருமுறைகள், பன்னிரு ஆழ்வார்கள், பன்னிருகை வேலவன், பன்னிரண்டு மாதங்கள், பன்னிரண்டு வருசத்துக்கு ஒரு முறை பூக்கிற பூ... என்று பன்னிரெண்டை மையமாக வைத்து வந்த இலக்கிய படைப்புகள், செய்திகள் நினைவிற்கு வந்தன. இப்படியெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிற இந்தப் புத்தி எம் பேராசிரியர் எனக்கு சொல்லித் தந்தது.

நண்பர் பூசிமா பன்னிரு கவிதைகள்... நூல்(!?) வெளியிட்டிருக்கிறார். முயற்சிக்கு வாழ்த்துக்கள். மனசு கனத்த பொழுதெல்லாம் வந்த கவிதைகளைத் தொகுத்திருக்கிறார். அதனால் கவிதை அளவில் முழுமை அடைந்திருக்கிறது.

கேட்டுப் பெறுவதில்லை சுதந்திரம் என ஒலிக்கும் முதல் கவிதை தொடங்கி விலங்கொடிக்க வாருங்கள், இலங்கை 'நிலவரம்', இயற்கையைப் போற்றும் அய்ந்தாவது கவிதை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சாடும் ஆறாவது கவிதை, ஒன்றுமேயில்லை(!) என்பதைப் பேசும் ஏழாவது கவிதை, 'என்னைக் கைது செய்ய வந்தார்கள். என்னைக் காப்பாற்ற யாருமேயில்லை' என்ற தொனியில் எட்டாவது கவிதை, வாழ்க்கையில் ஒருநாள் கழிவதைப் பேசும் 11-ஆவது கவிதை மாநுட அழைப்பைப் பேசும் 12-ஆவது கவிதை, 4-ஆம் கவிதையும் 9-ஆம் கவிதையும் பேசுகிற தொனியும், செய்தியும் வேறு... (புரிதலிலும் சிரமமிருக்கிறது) என கவிதைகள் பல்வேறு தளங்களில் இயங்குகின்றன.



நிகழ்கால நுகர்வியச் சூழலில் மனிதனின் உளவியலையும் நிறைவு செய்ய வேண்டியது எழுத்தாளனின் கடமையாயிருக்கிறது. அந்தவகையில் பன்னிரு கவிதைகள் கவிதை நூல் என்னும் முழுமையில் குறைவுபடுகிறது. விலைக்குத் தகுந்ததை எதிர்பார்க்கும் தன்மை கவிதை நூல் வாங்குவதிலும் உள்ளது எனும் நடைமுறை உண்மையை கணக்கில் கொள்வது இன்றியமையாததாகும்.

எதுவுமே சொல்லாமல் எதையோ சொல்வதற்காய் குழந்தையால் இழுக்கப் பட்ட முகப்போவியப் புதுமை மனசுக்குள் சிறகு விரிக்கிறது - பத்தாவது கவிதையைப் போல. பன்னிரு கவிதை பன்னிரண்டு பக்கங்கள் வரும் நாட்களில்... பத்து... ஐந்து... ஒன்று என அறிக்கைத்தாள் அளவுக்குச் சுருங்கிவிடுமோ என்றெல்லாம் (பயம்) கேள்வி எழுகிறது. கவிதைத் தொகுப்பில் ஹைகூ முயற்சி சரி. கவிதைத் தொகுப்பே ஹைகூ எனில் சரியாகுமா? இருந்தாலும் படைப்புகள் அனைத்தையும் அச்சேற்றுவது என்ற உறுதியிலும் பக்கத்தை நிரப்ப வேண்டியும் கதை, கடிதம், கட்டுரை, பேட்டி, கவிதை என கதம்பமாக்காமல் விட்டதும்கூட சரியே. ஆழமாய்ச் சிந்திக்க வேண்டிய விஷயம்.

-அழகுபாரதி



படிப்பகம்

www.padippakam.com


வெகு மக்கட் பத்திரிகையில் வரும்
அனைத்து உருவங்களையும்
உள்ளடக்கி
- சுருக்கமாக -
ஒருபடைப்பிலக்கிய பல்சுவை இதழ்
உள்நாட்டு அஞ்சலில்
(in INLAND LETTER)

**மது மலர்**

ஆசிரியர்: வலம்புரி லேனா
முகவரி :
பிரதான சாலை
திருவாலம் பொழில்
தஞ்சை (மாவட்டம்)
ஆண்டு நன்கொடை:ரூ.20முதல்
(அவரவர் பொருளாதார நிலைக்கேற்ப)



மேம்பாட்டுச் செய்தி மடலாக
ஒவ்வொரு இதழும்
(குழந்தைத் தொழிலாளர்,
சுகாதாரம், சுற்றுச்சூழல் என)
விஷயச் சிறப்பிதழாக
வெளிவரும்
தனிச்சுற்றுக்கான காலாண்டிதழ்

**திறன்**

ஆசிரியர்கள்: வேங்கடாசலபதி
செல்லதுரை
மதிகண்ணன்
முகவரி: திறன்
த.பெ.எண் 9, திருநகர்
மதுரை - 625 006
ஆண்டு சந்தா: ரூ.30



**'செயல் : அதுவே சிறந்த சொல்'**

என்ற பதாகைச் சொற்களை ஒவ்வொரு இதழிலும் அட்டையில் தாங்கி
இதுவரை 14 இதழ்கள் வெளிவந்துள்ள
மார்க்சிய, சமூகச் சிந்தனை இருமாத இதழ்

**பயணம்**

முகவரி : **P.K.SUBRAMANI, PAYANAM PUBLISHER,
L.56, K.V.TEMPLE STREET, SULTANPET,
BANGALORE - 560053**
ஆண்டு நன்கொடை : ரூ 30



இதுவரை 4 இதழ்கள் வெளியாகியுள்ள
இரு மாத இதழ்

**குயில்தோப்பு**

கௌரவ ஆசிரியர் : சங்கொலி பாலகிருஷ்ணன்
ஆசிரியர்கள் : பாலபாரதி, சு.மதியழகன்
முகவரி : **KUIL THOPPU,
P.BOX No.17269,
(KANCHPADA No.2),
MALAD (W),
MUMBAI - 400 064**
ஆண்டுக்கு : ரூ.30 (S.MADHIYALAGAN பெயரில்)

**எழுத மட்டுமல்ல**
**மறுக்கப்படும்**
**உரிமைகளுக்காய்**
**போராடவும் சம்மதமே**




படிப்பகம்

www.padippakam.com

# 20-ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம்

## கருத்தரங்கம்

### (பார்வையாளர்களின் பார்வையாளனாக. . . ஒரு பதிவு)

-கா. இளம்பரிதி

கடந்த 1999 மார்ச் 27, 28 ஆகிய தேதிகளில் நவீன தமிழ் இலக்கியப் படைப்புகள் மீதான விமர்சனக் கருத்தரங்கம் ஒன்றை குமரி மாவட்டம் களியக்கா விளையில் நடத்திய 'வானவில்' இலக்கிய வட்டம் 2000 ஆகஸ்ட் 12, 13 ஆகிய நாட்களில் கன்னியாகுமரியில் 20-ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கியப் பரப்பில் நிகழ்ந்த போக்குகள் குறித்த இருநாள் கருத்தரங்கை நிறப்பிரிகை சிற்றிதழ் மற்றும் அமைதி அறக்கட்டளை நிறுவனத்தின் துணையோடு நிகழ்த்தி முடித்தது.

1999 ஜூலை - 23, தாமிரபரணி நதியில் படுகொலை செய்யப்பட்ட மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் பதினெழுவரின் நினைவுகளுக்கு அரங்கம் அர்ப்பணிக்கப் படுவதாக 'வானவில்' தலைவர் குமாரசெல்வா அறிவிக்க, 12-ஆகஸ்ட் - 2000 காலை 11 மணியளவில் முதல் அமர்வு தொடங்கியது. அரங்கையும் - அமர்வையும் தலைமையேற்றுத் துவங்கிய நீல.பத்மநாபன் 'ஒரு நூற்றாண்டு தமிழ் வளர்ச்சி'யை 1947 க்கு முன், பின் எனப் பெரும் கூறுகளாகவும் தேவைப்படின் 1947 க்குப் பிந்திய அய்ம்பது ஆண்டுகளை இரு கூறுகளாகவும் பகுத்துப் பிரிக்கலாம் என்றும் சிறுகதை, கவிதை, நாவல் என தமிழ் இலக்கியத்தில் எல்லாத் தளங்களையும் இக்கால கட்ட பிரிவுகளுக்குள் இருத்தியே அவற்றின் வளர்ச்சிப் புறநிலையைப் புரிந்து கொள்ளலாம் என்றும் சுருக்கமான மற்றும் குறிப்பான உரை நிகழ்த்தினார்.

இந்த அமர்வின் தலைப்பில் மூன்று வேறு பார்வைகளை முன் வைக்கும் முகமாக அழைக்கப்பட்டிருந்த கட்டுரையாளர்களில் இருவர் வராததால் பேரா.தமிழவன் மட்டும் கருத்துரைத்தார். இவர்தன் பேச்சினால் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தின் போக்குகள் குறித்த நீலபத்மநாபன் கருத்துக்களை ஆமோதித்து அவரின் 'தலைமுறைகள்' நாவலை 20-ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த நாவல்களில் முக்கியமானதாகக் குறிப்பிட்டார்.

குமரி மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பேரா.தமிழவன் குமரி மாவட்டத் தமிழ் குறித்தும், நிலம் குறித்தும் அதிகமாகவே சிலாகித்துப் பேசினார். சென்னையை மையமாகக் கொண்டு கோலோச்சவும் பொதுத் தமிழின் அதிகாரம் குமரி போன்ற விளிம்பில் உள்ள வட்டார மொழியின் (தமிழ்தான்) வனப்பையும், தனிச்சிறப்பையும் புறக்கணித்து வருவதை 'மைனாரிட்டி' களாக இருக்கும் நாம்



படிப்பகம்

எதிர்த்துக் கேள்விக்குள்ளாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். இந்தியா தொடங்கும் இடம் என்று கன்னியாகுமரியை அவர் தனது பேச்சில் குறிப்பிட்டது சிலருக்கு அதிர்ச்சியாக இருந்தது. நீண்டு கொண்டிருந்த தமிழவனின் பேச்சுக்கு எதிர்வினையாக கிண்டலும் சலசலப்பும் செய்த, பின் நவீனத்துவத்தின் பெயரால் குடித்துவிட்டு வந்திருந்த சிலரால் (குடிப்பதற்குப் பலருக்குக் காரணங்கள்; சிலருக்கோ அது கோட்பாடு) அரங்கில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்பட்டது.

'பழந்தமிழ் நூற்கள் பதிப்பு : தமிழக வரலாறு மற்றும் பண்பாடு கட்டமைப்பு' என்ற இரண்டாவது அமர்வுக்குத் தலைமை தாங்கிய காவ்யா.சண்முக சுந்தரம் வேலைகளிலேயே கடினமான வேலை இது போன்று தலைமை தாங்குவதுதான் என்று ரெம்பவே ஆகுலைப்பட்டார். (நமக்குத் தெரிந்து உலகத்திலேயே மிகவும் சுலபமான வேலை இதுதான்) தமிழ் நூற்கள் பதிப்பும், தமிழக வரலாறும் என்ற தலைப்பில் கட்டுரை வாசித்த ர.பூங்குன்றன் நிறையவே புள்ளி விவரங்களைத் தந்தார். 'கிறித்தவமும் தமிழ் மறுமலர்ச்சியும்' (பேரா.தி.பாக்கியமுத்து) 'இஸ்லாமிய இலக்கியமும் தமிழ்ப் பண்பாடும்' (பேரா.எம்.எம்.மீரான் பிள்ளை) என்ற கட்டுரைகள் பெரிதும் கட்டுரையாளர்களின் மதச்சார்புத் தன்மையையே வெளிப்படுத்தின. (ஆனாலும் மீரான் பிள்ளைக்கு பாக்கிய முத்து பரவாயில்லை) அடுத்து கட்டுரை வாசித்த தொ.பரமசிவம் (திராவிட இயக்கமும் இலக்கியங்களும்) மணிக்கொடி காலத்திலிருந்து பார்ப்பன எழுத்தாளர்களாலும், விமர்சகர்களாலும் தொடர்ந்து திராவிட இயக்க இலக்கியங்கள் மற்றும் எழுத்துக்கள் மீது தொடுக்கப்பட்ட சகிக்க முடியாத கணைகளையும், அவதூறுகளையும் ஆதங்கத்துடன் வெளிப்படுத்தினார். மேலும் திராவிட இயக்கம் சார்ந்தும் தாழ்த்தப்பட்ட மற்றும் ஏனைய அமைப்புகள் சார்ந்தும் இயங்கிய பல்வேறு இலக்கியவாதிகள் மற்றும் சிற்றிதழ்கள் பற்றிக் குறிப்பிட்ட தொ.ப. தமிழ் இலக்கிய வரலாற்று வளர்ச்சிப் போக்கில் அவர்கள் அனைவரும் புறக்கணிக்கப்பட்ட அல்லது மறைக்கப் பட்ட சதியை அம்பலப்படுத்தினார்.

மதிய உணவுக்குப் பின் 'தமிழில் நவீனத்துவம் - நோக்கும் போக்கும்' என்ற மூன்றாம் அமர்வு காலையில் தாமதமாக வந்த அ.மார்க்ஸ் தலைமையுரையுடன் தொடங்கியது. நூற்றாண்டு தமிழ் இலக்கியப் போக்கு குறித்தும், அமைப்பியல், பின்-அமைப்பியல், பின்-நவீனத்துவம் போன்ற நவீனப் போக்குகள் குறித்தும் விரிவாகப் பேசிய பேரா.அ.மார்க்ஸ், 1908இல் தேவகோட்டைப் பகுதியில் தொடங்கிய கோவில் நுழைவுப் போராட்டம் 2000-ஆவது ஆண்டிலும் அதே பகுதியில் தலித்துகள் கோவில் வழிபாட்டு உரிமைக்கான (கண்டதேவி) போராட்டம் நடத்த வேண்டிய சாதிய சூழல்களாக நிலவினாலும், தமிழ் இலக்கியம் தலித் இலக்கியம் எழுத்தாக உருக்கொண்ட வகையில் வளர்ச்சிப் போக்கிலேயே இருப்பதாகக் கருத்துரைத்தார். மேலும் 1930 களில் அய்ரோப்பாவில் கால் பதித்த பாசிசம், நாசிசம் மற்றும் அதன் தாக்கத்திலான மேலைத்தத்துவ இலக்கியப் போக்குகளுடன் 1925 இல் இந்தியாவில் தொடங்கப்பட்ட பாசிச ஆர்.எஸ்.எஸ். இயக்கம், இடதுசாரி இயக்கம், தமிழகத்தில் துவங்கிய சுயமரியாதை இயக்கம் ஆகிய அரசியல் பின் புலங்களின்

www.padippakam.com

தாக்கங்களையும் 1930 களில் தொடங்கிய மணிக்கொடி காலத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டிய அவசியமிருக்கிறது என்றும், இரண்டாம் உலகப் போருக்குப் பின் அறுபதுகள் வரை மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட காலனியாதிக்கத்திலிருந்தான விடுதலை, சோசலிச அரசுகள் நிறுவப்பட்ட கிழக்கு அய்ரோப்பிய நாடுகளின் அரசியல், அதன் தாக்கத்தில் தமிழகத்தில் உருக்கொண்ட எழுத்துகள் பற்றியும், இதே காலகட்டத்தில் பெருமளவில் வெளியான திராவிட இயக்க எழுத்துகள் மற்றும் சிற்றிதழ்கள் பற்றியும் குறிப்பிட்ட அ.மார்க்ஸ் 80கள் வரை தமிழ் இலக்கியத்தின் நோக்கும் போக்கும் பார்ப்பன - சைவ வேளாளப் பண்பாட்டுப் பிரச்சாரமாகவும், இலக்கிய மேலாண்மையாகவுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது என்றும் வன்மையாகக் குறிப்பிட்டார். 1900 களின் தொடக்கத்திலேயே 'ஒரு பைசாத் தமிழன்' என்ற இதழ் நடத்திய அயோத்திதாச பண்டிதர், 'பறையன்' இதழ் நடத்திய இரட்டைமலை சீனிவாசன் உள்ளிட்ட தலித் இலக்கியவாதிகள் அறியப்பட்டிருந்தாலும், அய்ரோப்பிய பின்-நவீனத்துவக் கோட்பாடு தமிழில் அறிமுகம் செய்யப்பட்ட 80களின் பிற்பகுதியிலும் அம்பேத்கர் நூற்றாண்டு தொடக்கத்திலும் எழுச்சி பெற்ற தலித் இலக்கியம் தமிழ் இலக்கியத்தின் வேறு பரிமாணங்களைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

புதுமைப்பித்தன், மௌனி, ந.பிச்சமூர்த்தி போன்ற இலக்கிய 'ஜாம்பவான்'களுக்குப் புனித பீடங்கள் எழுப்பி, அதன் வாரிசுகளாக இலக்கிய மேலாண்மை செய்ய முயலும் (சுந்தர ராமசாமி போன்ற) நவீனத்துவ இலக்கியவாதிகளின் அரசியலைக் கடுமையாக விமர்சிக்கவும், எதிர்க்கவும் வேண்டியதிருக்கிறது என்று தனது பேச்சினூடே குறிப்பிட்ட அ.மார்க்ஸ் - காலச்சுவடு செப்டம்பர் 1,2,3 ஆகிய நாட்களில் சென்னையில் நடத்தவிருக்கும் (கட்டுரை எழுதிய தேதியில் நடைபெற இருந்த - இன்றைய தேதியில் நடந்து முடிந்துள்ள) 'தமிழ் இனி' மாநாடு (கருத்தரங்கம் அல்ல) பெரும்பான்மையினரின் அதிகாரச் செயல்பாடு எனவும், இது (கன்னியாகுமரி அரங்கு) இலக்கியச் சிறுபான்மையினரின் அவசியமான நம்பிக்கை தரும் செயல்பாடு எனவும் குறிப்பிட்டதை இங்கு குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை.

மூன்றாம் அமர்வில் (தொடக்க கால நாவல்கள், சிறுகதைகள்) குமரி எழிலன், 'காலத்திற்கு ஒவ்வாத கடுக்கனும் குடுமியும் வைத்திருக்கிறார் என்பதற்காக தாத்தாவை உறவு இல்லை என்று ஒதுக்கிவிட முடியுமா?' என்ற உவமைக் கேள்வியோடு அனுசரனையோடு அணுகினார். தொடர்ந்து வந்த சாரு நிவேதிதா (மணிக்கொடி) மூலவர்கள் அப்படிப்பட்ட தாத்தாக்கள் அல்ல என்றும், குறிப்பாக புதுமைப் பித்தனை மட்டும் எடுத்துக் கொண்டு அவரை (தள்ளாத வயதில் வீட்டை விட்டு விரட்டியடிப்பது போல்) முற்றிலுமாகப் புறக்கணித்தார். மேலும் தலித் மற்றும் கிருத்தவர்களுக்கு எதிரான கருத்துப் போக்குகளையும், சைவ-வேளாள கருத்தியல் மேலாண்மையையுமே அவரது எழுத்துகள் பெரிதும் நிறுவத் துடிக்கின்றன என்றும், சிலர் சொல்வது போல நவீனத்துவம், மாந்திரிக எதார்த்த வாதம் (Magical realism) என்ற வகையினத்திற்குள்ளும் அடங்காத கல்கி, சாண்டில்யன், அகிலன் வகை எழுத்துக்களே அவை என்றும் கடுமையாகச் சாடிப் பேசினார். அடுத்ததாக



படிப்பகம்

www.padippakam.com

தன்னை 'நாடார்' என்று பெருமிதமாகவும், சராசரி பிழைப்புவாதி என்று குறைபடுத்தியும் தன் விமர்சனம் செய்து பேசிய டாக்டர் வேதசகாய குமார் (நவீன எழுத்தில் புதிய பரிமாணங்கள்) புதுமைப் பித்தன் தொடங்கி சுந்தர ராமசாமி, ஜெயமோகன் வரை நவீனத்துவ புதிய பரிமாணங்களைக் குறிப்பிட்டார். நவீனத்துவத்தின் கடைக்குஞ்சாக ஜெயமோகன் இருக்கக்கூடும் என்றும் ஆருடம் சொன்னவர், அழுகாத குறையாகக் கழிவிரக்கத்துடன் மீண்டும் தன் விமர்சனம் செய்து கொண்டது சகிக்க முடியாததாக இருந்தது.

தொடர்ந்து 'தமிழ்ச் சூழலில் புதிய பயில் துறைகள்' என்ற அமர்வு நான்கில் 'மொழியியலின் வருகையும் தமிழ் மொழி, சமூகம் குறித்த பார்வைகளும்' (டாக்டர் கி.அரங்கன்) நாட்டார் வழக்காற்றியலும் புதிய பார்வைகளும் (டாக்டர் ஆ.சிவசுப்ரமணியன்) இறையியலும், புதிய பார்வைகளும் (அருட்திரு. செ.ராசமணி) ஆகிய கட்டுரையாளர்கள் பேசியதோடு முதல் நாள் அமர்வுகள் முடிந்தன. இரவு உணவுக்குப் பின் திருநெல்வேலி 'காஞ்சனை' திரைப்பட இயக்கம் தயாரித்த, ஆர்.ஆர்.சீனிவாசன் இயக்கிய 'நதியின் மரணம்' (தாமிரபரணிப் படுகொலைகள் பற்றியது) வீடியோ படக்காட்சி நிகழ்வும், பாதியளவு பார்வையாளர்களுடனான விவாதமும் பட இயக்குனர் சீனிவாசனுடன் மற்றொரு (நிரலில் திட்டமிடப்படாத) அமர்வாக இருந்தது.

இரவு தாமதமாகவே உறங்குவதற்குப் போய், 'சூரிய உதயம்' பார்ப்பதற்காக விடியாத காலையிலேயே எழுந்தும் பார்வையாளர்கள் பலரும் 13-ஆகஸ்ட்-2000 இரண்டாம் நாள் அமர்வு அய்ந்து - ஆறில் புத்துணர்வுடனே பங்கேற்றனர். 'ஊடகமும் தமிழ்ச் சூழலும்' அமர்வுக்குத் தலைமை யவனிகா சிறீராம். 'வெகுசன விருப்பும், கருத்துருவாக்கமும்' சமூக, அரசியல் பண்பாட்டுப் பின்புலங்களோடு மீடியாக்களால் எவ்வாறெல்லாம் செய்யப்பட்டன - செய்யப்படுகின்றன என்று ஆதாரங்களோடு அ.ராமசாமி பேசியதைத் தொடர்ந்து 'காஞ்சனை' சீனிவாசன் இருபதாம் நூற்றாண்டு தமிழ் சினிமா என்ற பெருந்தலைப்பு குறித்துப் பேச முற்படுகையில் 'எம்.ஜி.ஆர். என்ற சினிமாக் கதாநாயகன் தமிழ்நாட்டின் முதலமைச்சராகி, பின் நோய்வாய்ப்பட்டு இறந்த போதிலும், அவரது மரணச் சோகம் தாளாது ஏறத்தாழ 30 மனிதர்கள் அப்போது தற்கொலை செய்து கொண்டனர்' என்ற கலாச்சாரக் கேடுகளுக்குப் பின்புலமாக வீற்றிருக்கும் வெகுசன சினிமா என்ற அகன்ற வெளியை (70 MM!) தாம் நிராகரிப்பதாகவும், 60 ஆண்டுகால (தமிழ்) தீவிர சினிமா கர்த்தாக்களான ஜான் ஆபிரகாம், ருத்ரையா, ஜெயகாந்தன் போன்றவர்களை மறு வெளிப்பாடு செய்வதன் மூலம் தீவிர சினிமாவுக்கான பிரக்ஞையை பார்வையாளர்களிடம் ஏற்படுத்த வேண்டும் என்றும், தனது வாழ்வின் செயல்பாடாக அதுவே இருக்கும் என்றும் தீவிரமாகவே தன்னை வெளிப்படுத்தினார். ஜான் ஆபிரகாமின் 'அக்ரகாரத்தில் கழுதை' ஒரே திரைப்படப் பிரதியும் சரிவர பாதுகாக்கப்படாமல், பார்க்கக் கூடியவகையில் 20 நிமிடம் மட்டுமே ஓடக்கூடிய நிலையில் 'புழுதியில் எறியப்பட்ட நல்லதோர் வீணையாய்' ஏ.வி.எம்.படப்பிடிப்பு நிலையத்திற்குள் கவனிப்பாரற்றுக் கிடப்பதாய் அதிர்ச்சி கலந்த குரலில் சொன்ன சீனிவாசனின் கோபமும், வருத்தமும் நம்மையும் ஆமோதிக்கவே வைத்தது. அடுத்து



படிப்பகம்

www.padippakam.com

வாசிக்கப்பட்ட அ.மங்கையின் 'அடையாள அரசியலும் அரங்கமும்' கட்டுரையும் கலை, இலக்கிய செயற்பாட்டில் குறிப்பாக சினிமா வெளியைப் போலவே, அரங்கிலும் மேற்கொள்ளப்படும் அடையாள அரசியலைச் சுட்டியது. 'இணையத் தமிழ்' குறித்து ப.திருநாவுக்கரசு கலைஞர் கருணாநிதியை (தலைவர் - உலகத் தமிழ் இணைய மாநாடு விடயம்) கிலாசித்துப் பேசியதை பார்வையாளர்கள் பொறுமையுடன் கேட்க வேண்டியதிருந்தது.

அமர்வு ஆறில் பெண்ணியம் குறித்து அரங்க. மல்லிகா கட்டுரை வாசிக்க, 'புலம் பெயர் வாழ்க்கையும் தமிழின் அகற்சியும்' தலைப்பில் ஷோபா சக்தியின் கட்டுரை வாசிக்கப்பட்டது. இதே தலைப்பில் தெ.மதுசூதன் புலம் பெயர் வாழ்க்கை குறித்தும், அம்மக்களின் இலக்கிய அறிமுகங்கள், அவதானிப்புகள், அங்கீகரிப்புகள் குறித்தும் உணர்ச்சிப் பெருக்கோடு உரையாற்றிய போது அரங்கம் சலனமின்றி அவதானித்தது. 60-70களில் லண்டன் போன்ற பெருநகரங்களில் (நாடுகளில்) குடியேறி வாழும் படித்த, மேல்தட்டு, உயர்சாதி யாழ்ப்பாணத் தமிழரொருவரின் புலம் பெயர் எழுத்துக்களிலிருந்து 80-90களில் இந்தியாவிலும், மேற்குலக நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் கீழ்த்தட்டு, பள்ளிப் படிப்பு தாண்டாத, குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதி ஈழத் தமிழர்களின் புலம் பெயர் எழுத்துக்கள் வேறுபட்டது என்றும், அகதி வாழ்வின் பாடுகளை உணர்த்தும் வல்லமையுடையவை என்றும் அவர் குறிப்பிட்டது இங்கு மிகவும் முக்கியமானது.

விளிம்பு சுப்பையா தலைமை ஏற்க, நிறைவமர்வு வானவில் இலக்கிய வட்டம் நிறுவனர் கே.புஷ்பராஜ் முன்னிலையில் நண்பர் குமார செல்வா தொகுப்புரையும், அ.மார்க்ஸ் பதிலுரையும், ஜே.ஆர்.வி.எட்வர்ட் நன்றியுரையும் நல்க, ஏறக்குறைய 60 பார்வையாளர்கள் பங்கேற்ற கருத்தரங்கம் ஒன்றரை நாளில் முடிவுக்கு வந்தது - தமிழ் இலக்கிய வளர்ச்சி முடிவுக்கு வந்து விடாது என்பதைச் சொல்லாமல் சொல்லி.

□□□

நெல்லின் மக்களின் மகுட மணிக் கதிராக
ஏழாவது ஆண்டாக தொடர்ந்து வெளிவரும்
மள்ளர் இன விடுதலைக்கான, தமிழின விடுதலைக்கான
மாதஇதழ்

மள்ளர் மலர்

ஆசிரியர்: டாக்டர் குருசாமி சித்தர்
10-2,நால்வர் நகர்,
பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்),
கோயமுத்தூர் -641 046 தொ.பே. 0422 422287
ஆண்டு சந்தா : ரூ 90- ஆயுள் சந்தா : ரூ 1000-



படிப்பகம்

www.padippakam.com

யாரின் குரலோ
முள்ளில் சிக்கிப் படபடக்கிறது.
எஸ்.பி.பியோ
ஜேசுதாஸோ சித்ராவோ
எவரின் குரலிசையோ?

பயன்படுத்த
லாயக்கற்றுப் போனதில்
வீசியெறியப்பட்ட
ஒலிநாடாச் சுருள் அவிழ்ந்து
முள்ளில் சிக்கிப் படபடக்கிறது.
என் பிராயத்து
பட்டத்தின் வால்
மின் கம்பியில்
சிக்கித் துடித்ததைப் போல.

வயதும்
வருமானமும்
ஓய்ந்து போய்
மகன்கள் வீட்டிலும்
மகள்கள் வீட்டிலுமாய்
மாறி மாறி
அலைக்கழிக்கப்படும்
என் அந்திமம்.

முள் உணருமா?
இசையை.

-பாட்டாளி-

## எச்சரிக்கை முழக்கம்...

—ஜி.மாலினி

! எப்படி நடந்திருக்கும்...?
அடகு வைத்துவிட்டார்களா
அடித்து பறித்துக் கொண்டார்களா...?
தெரியவில்லை எங்கள் தலைமுறைக்கு.

! தமிழனுக்கு தனிநாடு
தமிழுக்கு தகுதி
பொய் வழக்கை திரும்பப் பெற
பதினேழு உயிர்கள்.

! தெரியவில்லை எங்கள் தலைமுறைக்கு -
அடக்கு முறைகள்
எப்படி
உங்கள் வசம் வந்ததென்று

! ஆனாலும் நம்பிக்கையுண்டு
இதையெல்லாம் ஒரு கை
பார்த்துவிடுவோமென்று.
அப்போது
விளைவுகள்தான் சற்று
கடுமையாயிருக்கும்
எச்சரிக்கையாயிருங்கள்.

## இருபத்தோராம் நூற்றாண்டு

-ஆர்.இராம்பாண்டியன்

எதிர் வீட்டை நோட்டமிட்டு-
விதவையான செல்வி
தென்படாததைப் பார்த்து
கூப்பிட்டாள் அம்மா.
விளக்கு அணைந்துவிட்டால்-
அவசரத்தில் வெளியேறினான் அண்ணன்.
பஞ்சாரத்தினுள் பார்த்தாள்
பூனை குறுக்கிடாதபடி அக்கா.
சென்று திரும்பும்வரை
எல்லாச் சகுனமும் சரியான
திருப்தியில் அப்பா-
முகூரத்தநாள் குறித்ததோ
காலண்டரின் கருப்பு எழுத்தைப்
பார்த்து.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு தமாஷ்கவிதை அல்லது ஒரு கவிதை தமாஷ்

-சு. நவநீதகண்ணன்

கருத்து முதலா? பொருள் முதலா?
என குழம்பும் தத்துவாத்மாக்களே!
செயல் முதல் எனத் தெளியுங்கள்.

கலை வாழ்க்கைக்கா? கலைக்கா?
என வாதிடும் அறிவு ஜீவிகளே!
கலை கலைஞனுக்கே எனத் தெளிவீர்.

கோழி முதலா? முட்டை முதலா?
என தவிக்கும் சாமான்யர்களே!
ஆதாம் எலும்பிலிருந்து ஏவாள்,
சேவலின் இறகிலிருந்து கோழி.

# மனிதர்களின் கதை

-விக்ரமாதித்யன் நம்பி

௦

ஒரு
நதி போல வாழ்ந்தவன்
கடல்
போல முடித்தான்

௦

கனல் மாதிரி
வளர்ந்தவன்
காட்டுத்தியாய்
காலிபண்ணிப் போய்ச் சேர்ந்தான்

௦

தென்றல்
போலத்தான் இருந்தான்
பிறகெப்படி
புயல்போல ஆனான்

௦

மண்
மாதிரி இருந்தவன்
ஆகாயமாய் கவிந்த
அழகு தனி

௦

இயற்கையை ரசிக்கவே
இன்றைக்குக் காசுபணம்
வேண்டும்
என்கிறான் இவன்

௦



படிப்பகம்

www.padippakam.com

# தூக்கம்

-ராசீ தங்கதுரை

அது
என் தூக்கத்திற்கு எட்டாத
தொலைவில்
தூக்கத்தில் இருக்கிறது

நீ
கொடுத்தவைகளும்
தழும்புகளும்
எத்தனை நாள்தான்
தூக்கம் கொடுக்கும்

எனக்கு தூக்கம் மறக்கவில்லை
தூக்கத்திற்கு தூக்கம் மரத்துப் போனது

எப்பவோ தூக்கம் கொடுத்த
ரணத்தழும்புகளை
கீறி ரணமாக்கினேன்
உள்ளேயிருந்தது
தூக்கமின்மையின் ரணம்

தலையணையடியில்
தூக்கத்திலிருப்பதை தடவிப் பார்க்கலாம்
கவிதை வரும்
தூக்கம் வராது

கவிதை எழுதி களைக்கலாம்
களைப்பின் முடிவில்
தூக்கம் வருமென்று
யார் சொன்னது?

தூக்கத்திலிருப்பதாய்
கனவு காணலாம்
கனவு காண தூக்கம் வேண்டுமே!



படிப்பகம்

www.padippakam.com

# குற்றம்

**-யவுனிகா ஸ்ரீராம்**

அபிப்பிராய சம்போகங்களில்
அடர்ந்து கொண்டிருக்கிறது மனம்
நீரள்ளி இறைத்துப் போன வானத்தில்
நிலவள்ளித் தெளித்த வெளிச்சம்
உருகத்திப் பூக்கள் மணம் வீசும்
சேறள்ளித் தெளிக்கும் வாகனம்
சிலிர்க்கும் குளிர் உதறும் மத
உடல் கொண்டலையும் நீளத் தெருக்களில்
எவள் கிடைப்பாள் என் ஏவாளென
பார் நுழைந்து கொண்டேன்
பல கோணங்கள் கண்ணில் உருள
யார் அள்ளித் சேர்த்தார் வீட்டில்
அலங்கோல வாந்தியில்
பேர் சொல்லி அழைத்தது யார்
இந்தப் பிணம் போகும் வீதியில்
கனவில் புணர்ந்த நங்கை
காசு கேட்டு நிற்கும் பிச்சையாய்
அகவெட்கம் தாளாமல்
அரைரூபாய் ஈந்து வந்து
குறி நனைத்து குளிக்கலானேன்
குற்றம், குற்றம் பெருகியது.


*உதயதாரகை கலைக் கழகத்தால்*
*சிறந்த சிற்றிதழ் 2000 விருது பெற்ற*
*தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் மாத இதழ்*

**ஏழை தாசன்**

*ஆசிரியர் : எஸ். விஜயகுமார்*
*முகவரி : 26,அடப்பன்வயல் 8-ஆம் வீதி*
*புதுக்கோட்டை - 622 002*
*ஆண்டு கட்டணம் ரூ.35.00* *வாழ்நாள் கட்டணம் ரூ.350.00*




படிப்பகம்

www.padippakam.com

# போராட்டம் உலகமயமானது

மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை உலகமயமாதற் பாதிப்புகளுக்குத் தாம் உள்ளாவதை இன்னும் முழுமையாக உணர்ந்தார்களில்லை. மக்களில் பலரும்கூட உலகமயமாதல் என்பது தேம்ஸ் நதியிலிருந்து தங்கள் நாட்டிற்கு ஒரு வாய்க்கால் வெட்டப்பட இருப்பது போலவும், வெள்ளை மாளிகையில் நமக்காக ஒரு இருக்கை ஆயத்தமாக இருப்பது போலவும் கனாக் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

உலகமயமாக்குவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்களுள் ஒன்றுதான் WTO (WORLD TRADE ORGANISATION) உலக வர்த்தக நிறுவனம். நம்நாட்டில் கிடைக்காது என சிறு மீன்கள், கோழித் தொடை, தீப்பெட்டி என பல பொருட்களை இறக்குமதி செய்ய நம் 'மாண்புமிக்கோர்' மக்களுக்காக மனமிரங்கிக் கைச்சாத்திட்டதும் உலக வர்த்தக நிறுவனத்தின் அன்புக்கட்டளைக்கு இணங்கித்தான்.

1999 நவம்பர் 30-இல் உலக வர்த்தக நிறுவனத்தின் 'உலக வர்த்தக மாநாடு' சியாட்டிலில் தொடங்கியது. 1999 டிசம்பர் முதல் வாரத்தில் இந்தியாவில் பல இடங்களிலும் இம்மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள்,


**சியாட்டிலில் நடந்தது என்ன?**

வெளியீடு : மார்க்சியப் படிப்பு வட்டம்
விற்பனை உரிமை : தாமரைச் செல்வி பதிப்பகம்
31-48, இராணி அண்ணா நகர்
கலைஞர் நகர்
சென்னை - 600 078
பக்கங்கள் : 32 விலை : ரூ. 5.00


போராட்டங்கள் நடைபெற்றன. அமெரிக்க விவசாயக் கம்பெனியான மான்சாண்டோ விரட்டலுக்காகவும், நர்மதை அணைத்திட்டத்தின் பாதகங்களுக்கு எதிராகவும் என பல்வேறு கோரிக்கைகளுக்காக அந்தப் போராட்டங்கள் நடத்தப் பட்டன. உலகம் முழுவதிலும் அந்த நாட்களில் உலக வர்த்தக மாநாட்டிற்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றன. அத்துடன் உலகம் முழுவதிலிருந்தும் மாநாடு நடக்கும் சியாட்டிலை நோக்கி மக்கள் வந்திருந்தனர் - அங்கு ஒரு போராட்டத்தை வடிவமைக்க. சியாட்டிலில் ஒரு மாபெரும் தொடர் போராட்டம் நடைபெற்றது. பல தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மிகமிக முக்கியமான வேறு சில செய்திகள் வெளியிட வேண்டிய கடமையிருந்ததால் இது போன்ற தேவையில்லாத செய்திகளை வெளியிடாதிருந்தன.

கம்யூனிஸ்ட்டுகள், கம்யூனிஸ்ட் கட்சிகள் என்றவுடன் முன்பு நமக்கு ஒரிரு நாடுகளும், இன்று சில நாடுகளும் மட்டும் நினைவில் வந்தன; வருகின்றன. அமெரிக்காவில் Revolutionary Comunist Party (RCP) என்று ஒரு கம்யூனிஸ்ட் கட்சி இருப்பதும் அக்கட்சி Revolutionary Worker என ஒரு வாரப்பத்திரிகை



படிப்பகம்

www.padippakam.com

நடத்துவதும் நம்மில் பலருக்கு புதிய, ஆச்சர்யமான, ஆறுதலான விஷயம். அப்பத்திரிகையில் 1999 டிசம்பர் 12-இல் பாப் அவேக்கியான் எழுதி வெளிவந்த Battle of Seatle என்ற கட்டுரை சென்னை மார்க்சிய படிப்பு வட்டத்தினரால் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

தமிழாக்கம் செய்தவர் அ.ஜ.கான். தமிழாக்கத்தைப் பொருத்தவரை உறுத்தலில்லாத, தெளிவான, மூலத்தைப் படிப்பது போன்ற, மக்களின் வார்த்தைகளால் ஆன மொழி பெயர்ப்பு. Battle of Seatle என்ற ஆங்கிலத் தலைப்பை 'சியாட்டிலில் நடந்தது என்ன?' என தமிழாக்கியதிலிருந்தே மொழிபெயர்ப்பாளரின் தமிழர்களின் ஆர்வம் மீதான அறிவுத் தெளிவு தெரிகிறது. பல ரஷ்ய இலக்கியங்களை தமிழ்ப்படுத்துகிறேன் என்று தமிழைப் படுத்தியதும், அந்தத் தமிழ் நம்மைப் படுத்தியதுமான அனுபவங்கள் நமக்கு நிறையவே உண்டு.

இவ்வெளியீட்டின் உள்ளே DIRECT ACTION NETWORK (DAN) என்ற போராட்டக்குழுவின் போராட்டங்கள் மட்டுமல்லாது அனைத்துத் தரப்புப் போராட்டங்களும், அனைத்து நாட்டில் நடைபெற்ற போராட்டங்களும் அவை பற்றிய குறிப்புகளும் உள்ளன. அத்துடன் உலக வர்த்தக மாநாட்டில் சமூக மனசாட்சி கொண்ட வர்த்தகர் என தன்னை நிரூபிக்கத் துடித்த திருவாளர் பில் கிளிண்டன் அவிழ்த்து விட்ட பொய் மூட்டைகளும், அதற்கான மறுப்புகளும் உள்ளன.

உலகமயமாதலுக்கு எதிரானவர்கள் மட்டுமன்றி, ஆதரவானவர்களும், உலகமயமாதல் பற்றி எந்தவிதமான கருத்துக்களும் இல்லாதவர்களும்கூட அவசியம் படிக்க வேண்டிய வெளியீடு சியாட்டிலில் நடந்தது என்ன?

**- வீரா..**


தன்னம்பிக்கை வளர்ப்போம்!
தடைச்சுவர் தகர்ப்போம்!
எனும் முகப்பு முழக்கத்துடன்
மடிப்பிதழாக மாதாமாதம் ஒலிக்கும்

**பெண்ணியக்குரல்**

ஆசிரியர் : மு.க.கண்மணி
முகவரி : 277, ஆலங்குடி சாலை
அரிமழம் (வழி)
சே.குளவாய்ப்பட்டி - 622 201
புதுக்கோட்டை மாவட்டம்
ஆண்டு நன்கொடை ரூ.20.00



காக்கை குருவி எங்கள் சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
என்ற முத்திரைச் சொற்களை
முதற் பக்கத்தில் தாங்கி வரும்
சுற்றுச் சூழல் மாத இதழ்

**புதிய கல்வி**

ஆசிரியர் : மெர்சி பாஸ்கர்
இணை ஆசிரியர : அசுரன்
முகவரி : நியூ - எட் பப்ளிகேசன்ஸ்
ஹெச் 2 -30,
இராணி மங்கம்மாள் காலனி,
அங்கு நகர் அஞ்சல்,
திண்டுக்கல் - 624 008
சந்தா : ஆண்டு ரூ 75 ஆயுள் ரூ750




படிப்பகம்

www.padippakam.com

# கதவு

-கா. இளம்பரிதி

தட்டப்படாத கதவின் வெறித்த பார்வையை
திறந்து அறைய ஏங்கும்
சுவர்களுக் குள்ளுறங்கும் மனம்

திடுக்கிடும் சிற்றொலிக்கும்
தாழ் திறக்க ஓடும் பூனை
நிலம் பாரித்த மிரட்சியோடு -

அழுத்திப் பூட்டிய பின்னும் இண்டு
இடுக்குகளில் கசியும் ஈரக் காற்று
எவர் அழுகையையோ சுமந்து

யாரும் சிதைக்காத சலனத்தின்
யந்திர நிசப்தத்தை உடைத்து
மிரளாத பூனையாய்
எதுவாய் யாராய்....
சுவரின் பூச்சாய் இறுகிய

மனம் கரைந்து விரிய
கதவின் ஓரம் நிரடும்
உயிர்த்த காலடிச் சரடு.

□ □□□ □

*'நல்ல இலக்கியத்தைக் காணும்போது*
*அதைத் தெரிந்து கொள்ளவும்,*
*பரிட்சயம் செய்து வைக்கவும் திராணி வேண்டும்.*
*போலியைக் காணும்போது*
*யார்வந்து நெற்றிக் கண்ணைத் திறந்தாலும்*
*அது போலி என்று சொல்வதற்கும்*
*நெஞ்சழுத்தம் ஒன்று இருக்க வேண்டும்'*

*-புதுமைப்பித்தன்*



படிப்பகம்

www.padippakam.com

# பொறுமையே சாதனை

-விக்கிரமாதித்யன்

கேஷ் ஸ்டவ் இரைந்து
கொண்டிருக்கிறது
ஹிந்திப் பாட்டுக் கேட்டுக்
கொண்டிருக்கிறது
எதுகை மோனையோடு
எலக்ட்ரிக் ட்ரையின் ஓடிக்
கொண்டிருக்கிறது

யாரைத் தேடி வந்தேனோ
இல்லை அவன்
சிநேகிதன்
இருந்தான்

என் புலன்கள் செத்துப்
போயின
சாகவில்லை நான்
எனக்கும் தெரியும்

விதி எல்லாவற்றறையும்
கொண்டு செலுத்தும்
விபத்தா
வெகுமானமா என்றும்

நினைவிருக்கிறதா நேற்று
என்ன குழம்பு சாப்பிட்டது.
நேற்று மீதமில்லாமலா
இன்று!

□□□

புதிய நிலம்
புதுப் பண்ணையார்
பழைய கூலி

-பால பாரதி



படிப்பகம்

www.padippakam.com




# ரகரவொற்றும் இதழ்களும்

**-அய்யன்**

தமிழ் எழுத்துக்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு வடிவ மாற்றங்களை அடைந்து வந்துள்ளன. கல்வெட்டுக் காலத்தில் இருந்த எழுத்துக்கள் ஓலைச்சுவடி காலத்தில் மாற்றம் அடைந்தன. ஓலைச்சுவடிகால எழுத்துக்கள் அச்சுப் பொறி காலத்திலும், தட்டச்சு காலத்திலும் சில மாற்றங்கள் அடைந்தன.


தற்போது உயிர் எழுத்துக்களுக்குப் புள்ளி வைப்பது இல்லை. ஆனால் தொல்காப்பியர் காலத்தில் உயிர் எழுத்துக்கள் எ, ஒ ஆகிய எழுத்துக்கள் புள்ளியைப் பெற்றிருந்தன. இவையெல்லாம் கருத்தில் கொண்டே தந்தை பெரியார் அவர்களும் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார். அவரது நூற்றாண்டு விழாவையொட்டி அவை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதால் ஒரு ஒழுங்கு முறை கடைப் பிடிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றமடைந்த எழுத்துக்களுள் அச்சுக்கலை, தட்டச்சு தோண்றியதால் ஒரு தவறான வடிவத்தை ரகரவொற்று பெற்றுள்ளது. உயிர் மெய் எழுத்துக்களான க, ங, ச, ஞ, த, ப, ம போன்ற எழுத்துக்களின் மெய்வடிவத்தைக் குறிக்க, அவற்றின் மேல் புள்ளி வைக்கப்படுகிறது. ஆனால் ரகரவொற்றைக் குறிக்க 'ர' என்ற எழுத்தின் மேல் புள்ளி வைப்பதற்குப் பதில், துணையெழுத்தின் மேல் புள்ளி வைக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. 'ர்' இது தவறானது மட்டுமல்ல. தமிழ் எழுத்துக்களின் வடிவ ஒழுங்குக்கும் முரணானது ஆகும்.

இதே தவறு ரகர வரிசையில் உள்ள ஏனைய எழுத்துக்களுக்கும் பின்பற்றப் படுகிறது. ர, ரா என்ற எழுத்துக்குப் பின் வரும் வடிவஒழுங்கு ரி, ரீ போன்றவற்றுக்குப் பின்பற்றப்படவில்லை. துணை எழுத்தின் மேல் வளைவுகள் கொடுத்து (ரி, ரீ) பின்பற்றப்படுகின்றன.

தற்போதைய தமிழ் எழுத்துக்கள் வீரமாமுனிவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை. இவற்றில் உள்ள வடிவ ஒழுங்கமைப்புக்காகவே பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் ஏற்பட்டது. அத்துடன் ரகரவொற்றின் தவறான கடைப்பிடிப்பும் நீக்கப்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் இதழ்கள் இத்தவறைப் பின்பற்றுகின்றன. பெயர்ப் பலகை எழுதுவோரும் இதையே பின்பற்றுகின்றனர். 'கதவு' இதழ் தொடக்கத்திலிருந்தே முறையாக சரியான ரகரவொற்று (ர், ரி, ரீ) வடிவத்தைப் பயன்படுத்தி வருவதைக் கண்ணுற்றேன். அதற்காக இதன் ஆசிரியர் குழுவைப் பாராட்டுகிறேன். ஏனைய இதழ்களும் ரகரவொற்றின் சரியான வடிவைப் பயன்படுத்தலாமே?






படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமைகள்?

'தமிழகத்தில் மனித உரிமைகள் 1998-2000' என ஒரு நூல் விமர்சனத்திற்காக வந்திருந்தது. தமிழகத்தில் மனித உரிமைகள் எப்படி எல்லாம் மீறப்பட்டிருக்கின்றன - மீறப்படாதிருப்பதற்கான பரிந்துரைகள் எவை எவை என்ற களஆய்வுகளின் அடிப்படையிலான அந்நூலே 'மனித உரிமைகள்' மீதான ஒரு விமர்சனம்தான். சில உண்மைகளை விமர்சிப்பதைவிட பகிர்ந்து கொள்வதே சிறந்தது. எனவே அந்நூலின் முன்னுரை இங்கே... நூலை அறிமுகப்படுத்துமுகமாக...

*மலர்ந்துவிட்ட மனித குலம் எத்தனையோ மாற்றங்களைச் சந்திக்கவிருக்கின்றது. தகவல் தொடர்பு சாதனங்கள் மனிதன் சிந்திக்கும் வேகத்தை நெருங்கிவிடும். உலகமெங்கிலுமுள்ள நிறுவனங்களுக்கு மட்டுமல்ல*

> **தமிழகத்தில் மனித உரிமைகள் 1998-2000** வெளியீடு : மக்கள் கண்காணிப்பகம்-தமிழ்நாடு
> 7, பி.டி.இராசன் சாலை
> இரண்டாவது தெரு
> மதுரை-625 002
> பக்கங்கள் : 340 விலை : ரூ.75.00

*பெரும்பாலான மனிதர்களின் செயல்பாடுகளுக்கும் கணிப்பொறியே தலைமையளித்து ஒருங்கிணைக்கும். இந்த மாற்றங்களுக்கு அடிப்படையாக உலகமயமாதலின் ஒரு பகுதியான சுதந்திரச் சந்தை விளங்கும். நாடுகள், தேசங்களின் எல்லைகள் வர்த்தகம் மற்றும் நுகர்வுப் பொருட்களின் வீச்சினால் மழுங்கிப் போகும். வெகுமக்கட் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் தாங்கள் விரும்புகின்ற வகையில் தங்களுக்கான பார்வையாளர்களையும், வாசகர்களையும் உற்பத்தி செய்யும். இந்தப் பிரம்மாண்டமான வளர்ச்சி வேகத்தில் மனிதமும், மனித நேயமும் தேட முடியாதபடி தொலைந்து போகும் என்ற எச்சரிக்கை அறிகுறிகள் இப்போதே எங்கெங்கும் தெரிகின்றன. பிரம்மாண்டமான பன்னாட்டு நிறுவனங்களும் தேசங்கடந்த தொழிற்கழகங்களும் நாடுகளுக்கிடையே நடைபெறும் வர்த்தக உடன்பாடுகளில் சுதந்திரமாக வர்த்தகம் புரிய "தேசிய உரிமைகளை" பெறுகின்றன. ஆனால் அதே உரிமைகள் அந்த தேசத்தில் வசிக்கும் சாதாரண குடிமகன்கள் கேட்கும் போது மறுக்கப்படுகின்றன.*



படிப்பகம்

www.padippakam.com

கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் நம்மைச்சுற்றி நடைபெறும் இந்த மாற்றங்களை உன்னிப்பாக கவனிப்பவர்களுக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இன்று வசதி படைத்தவர்களே நுகர்வோர்களாக மாறிவருவதும் மீதியுள்ள சாதாரண மக்களுக்கு சேரிகளும், சிறைகளுமே சொந்தமாக வருவதும்தான் அது. பன்னாட்டு நிறுவனங்கள் பெறும் தேசிய உரிமைகள் இத்தேச மனிதர்களுக்கு கிடையாது என்றான பின் அவர்கள் வாழ்வதற்கோ, பாரபட்சமின்றி நடத்தப்படுவதற்கோ, சித்ரவதை உள்ளிட்ட பல்வேறு வன்முறைகளிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்கோ வாய்ப்புகள் மிகவும் அருகி வருகின்றன. அதுவும் அவர்கள் சிறுபான்மையினராகவும் தலித் மக்களாகவும் இருந்தால் அவர்கள் உயிர்வாழ்வதற்கேகூட உரிமைகள் இல்லை. இச்சூழலில் பெண்களாக இருந்தால் அவர்கள் உயிர் வாழ்வதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லை என்பது மட்டுமின்றி அவர்களின் உடல்கள் மீதே அவர்களுக்கு எந்தவித உரிமையுமில்லை என்பதையே தமிழக மனித உரிமைகளின் நிலை குறித்த இந்த நூல் காட்டுகிறது.

இந்நூலில் மனித உரிமை மீறல்களும் வன்முறைகளும் வரிசையாக ஆதாரங்களோடு தொகுக்கப்பட்டுள்ளன.

முதல் அத்தியாயம், மக்களின் நண்பர்கள் என்று அறிவித்துக் கொள்ளும் போலீஸ் நிலையங்கள், அதற்கு முற்றிலும் மாறாக சட்ட விரோதமான முறையில் சாதாரண மக்கள் மீது செலுத்தப்படும் வன்முறைக் கூடாரங்களாக மாறிவிட்டன என்பதை ஒவ்வொரு வழக்கின் மூலமாகவும் கூறுகிறது.

இரண்டாவது அத்தியாயம், போலீஸ் நிலையத்தில் ஒரு கல்லூரிப் பேராசிரியருக்கு நடந்த வதையை விவரிக்கின்றது. ஒரு பேராசிரியருக்கே இந்த நிலை என்றால் சதாரண மக்களின் கதி என்ன ஆகும்? தமிழகம் மற்றும் கர்நாடக அதிரடிப்படையினரால் வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் நடத்தப்பட்ட வதைகளின் மூலம் அதையும் விரிவாக விளக்குகிறது. இந்த வதைகள் இட்லரின் நாசி முகாம்களில் நடத்தப்பட்டதை விட மிக கொடூரமானவையாக உள்ளன. விசாரணை என்ற பெயரில் போலீஸார் அடிப்பதை சர்வசாதாரணமாக வளரவிட்டால் எவ்வளவு அபாயகரமான விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதையும் இந்த அத்தியாயம் சுட்டிக்காட்டி எச்சரிக்கின்றது.

மூன்றாவது அத்தியாயம், குற்றம் சாட்டப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் (அவர்கள் பயங்கர ரவுடிகளாகவோ அல்லது கிரிமினல்களாகவோ இருந்தாலும்) அவர்களை போலீஸார் சட்டப்படியே நடத்த வேண்டுமேயன்றி சுட்டுக் கொல்வதும் அதன்பின் அவர்களை பயங்கரமானவர்களாக சித்தரிப்பதும் அப்பட்டமான அராஜகமே என்பதை தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்ற மோதல் சாவுகளை சுட்டிக்காட்டி தெளிவுபடுத்துகின்றது.

நான்காவது அத்தியாயம், குற்றவாளிகளையும், குற்றம் சாட்டப்பட்டவர்களையும் சீர்திருத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட சிறைச்சாலைகளில்



படிப்பகம்

www.padippakam.com

கலவரங்களும் மனித உரிமை மீறல்களும் அதிகரித்து வருகின்றன - இதற்கு முக்கியக் காரணம் இச்சிறைகளில் கைதிகளின் மனித உரிமைகள் பேணப்படுவதில்லை என்பதுதான். இதற்கு தீர்வாக சிறைச்சாலைகளின் நிலைமையை மேம்படுத்த அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறது.

ஐந்தாவது அத்தியாயம், பெண்கள் மீதான வன்முறையின் பரிமாணங்களை புள்ளி விபரங்களோடு விளக்குகின்றது. பாலின ரீதியாக பாரபட்சமான சட்டங்கள் இருப்பதும், இந்த வழக்குகள் புலன் விசாரணை செய்யும் போலீஸார் பாலியல் கண்ணோட்டமின்றி இருப்பதுமே இந்த வன்முறை நீடிப்பதற்கான காரணங்கள் என்று கூறுகின்றது. இவ்வன்முறைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க ஒவ்வொரு சட்டமும் எப்படி மாற்றப்பட வேண்டும் என்பதை இந்த அத்தியாயம் வலியுறுத்துகிறது.

ஆறாவது அத்தியாயம், இந்தியாவில் முக்கியமாக தமிழகத்தில் புரையோடிப்போன சாதியம் இன்று சாதிய வெறியாக மாறி தாழ்த்தப்பட்டவர்கள் தங்களது உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் போதெல்லாம் அவர்களது குரல்வளையை நெறிக்கும் வன்முறைகளாக வெடிப்பதைக் காட்டுகின்றது. இந்த வன்முறைகளில் பாதிக்கப்படுவோர் பெரும்பாலும் தலித்துகளே என்பதையும் இந்த அத்தியாயம் சுட்டிக் காட்டத் தவறவில்லை. இதற்குத் தீர்வாக தலித்துகள் உயிர் வாழ்வதற்கு எதிரான தீண்டாமை ஐ.நா.வின் இனப் பாகுபாட்டிற்கான வரையறையில் ஒன்றாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பதில் துவங்கி பல

## மௌன உயிர்

—மு. முருகேஷ்

தாய்பசுவின்
ஈரத் தழுவலில்
முகம் தூக்கி கண் மலரும்...
பசித்த கன்று.

லேசாய் துளிர்த்த
அரும்பிற்கு
காற்றின் வருடல்
இன்னும் தூண்டும்.
வற்றிய குளக்கரையோரம்
இலையுதிர்த்த மரங்கள்
வெயிலை உள்வாங்கி
வேர்களால் வியர்க்கும்.

இளைப்பாறுதலோடு
சாய்ந்து படுக்கும்
தெருநாயின் அலறல்
குழந்தைகளின்
கல்லெறிதலில்
அறுபட்டு ஓடும்.

நகரெங்கிலும் ஒலிக்கிற
அர்த்தமற்ற இரைச்சலை
காதுமூடி தடையெழுப்ப...

கண்ணைக் குளிர்வித்து
வண்ணம் காட்டிப் போகும்...
அந்த பூங்காவினுள்
படபடத்த பட்டாம் பூச்சியொன்று.



படிப்பகம்

www.padippakam.com

அழுத்தமான மற்றும் ஆழமான பரிந்துரைகளையும் முன் வைக்கிறது.

ஏழாவது அத்தியாயம், மனித வாழ்வில் குழந்தைப் பருவத்தின் முக்கியத்துவத்தைக் கூறி இன்றைய இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் குழந்தைகளின் அடிப்படையான உரிமைகள் குழந்தைத் தொழிலாளர் முறையினாலும் அவர்கள் மீது தொடுக்கப்படும் பாலியல் சுரண்டல்களினாலும் மீறப்படுவதும், இதனால் அவர்களது குழந்தைத் தனம் மட்டுமல்ல ஆளுமையே சிதைக்கப்பட்டு நாட்டின் எதிர்காலமே அழிக்கப்படுவதையும் விரிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்படுவதற்கு அவசியமான சட்டத் திருத்தங்களையும் கல்வித் துறையில் இலவசக் கட்டாயக் கல்வி ஆக்கப்படுவதற்கான பரிந்துரைகளையும் இந்த அத்தியாயம் முன் வைக்கிறது.

சமூகத்தின் மீதான ஒருவித
அங்கத நகைச்சுவை
விமர்சனத்துடன்
மாத இதழாக வருகிறது

**தூரிகை**

ஆசிரியர்கள்:**அ. கிருஷ்ணகுமார்**
**வ. தங்கவேல்**

முகவரி : **7-295, நேருநகர்,**
**பு.புளியம்பட்டி, (அஞ்)**
**ஈரோடு மாவட்டம்**
**தொ.பே.68078**

**ஆண்டு சந்தா:ரூ.30.00**

எட்டாவது அத்தியாயமான சிறுபான்மையோர் உரிமைகள் ஆளுங்கட்சியின் பின் புலத்தோடு இன்றைக்கு நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையும் அதனால் சிறுபான்மையர் உரிமைகள் நசுக்கப்பட்டு அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களையும் சம்பவ வாரியாகத் தொகுத்து அளிக்கிறது. அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள மதச் சார்பின்மையும் சிறுபான்மையோர் உரிமைகளும் நடைமுறைப் படுத்தப்படும்போதே நாட்டின் மதச்சார்பின்மை காக்கப்பட்டு சிறுபான்மையோரின் உரிமைகளுக்கு உத்திரவாதமளிக்கப்படும் என்று கூறுகிறது.

ஒன்பதாவது அத்தியாயம், சிறைக் கைதிகளுக்கு உள்ள உரிமைகள் கூட இன்றி சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகளின் பரிதாப நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது. சர்வதேச அகதிகள் தொடர்பான உடன்பாட்டை இந்தியா கையெழுத்திட்டு ஏற்றுக் கொள்ளும் போதே அகதிகள் 'அகதிஎன்ற அந்தஸ்துடன் நடத்தப்படுவர் என்பது போன்ற ஆணித்தரமான விஷயங்களை இந்த அத்தியாயம் முன் வைக்கிறது.

பத்தாவது அத்தியாயம் நாட்டில் வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரால் பகுதியின் சுற்றுச் சூழலை அழித்து மக்களின் வாழ்வுரிமையை பறிக்கும் தொழிற் திட்டங்களின் பாதக அம்சங்களையும் அதற்கான சட்ட ரீதியான தீர்வுகளையும முன் வைக்கிறது.

□ □ □



படிப்பகம்

www.padippakam.com

பதினோறாவது அத்தியாயத்தில் சாதிக் கலவரங்கள், கோவை குண்டு வெடிப்பு போன்ற பெரும் மனித உரிமை மீறல் சம்பவங்களில் நியமிக்கப்படும் நீதிபதிகளின் தலைமையிலான விசாரணை ஆணையங்கள் அவற்றின் முடிவுகள் பிரச்சினைகளுக்கான ஆணையங்களின் பரிந்துரைகளுடன் கூறப்பட்டுள்ளன. இந்த அத்தியாயத்தின் தொடர்ச்சியாக அரசியல் சாசனத்திலுள்ள மனித உரிமைகளை பாதுகாக்கவும் மனித உரிமை மீறல்களை கண்காணித்து அவற்றில் தலையிடவும் நியமிக்கப்பட்டுள்ள தமிழக மனித உரிமை ஆணையம் வெறுமனே பரிந்துரைக்கும் அமைப்பாக இருப்பதைச் சுட்டிக்காட்டி அதன் பலவீனமான செயல்பாடு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மாநில மனித உரிமை ஆணையம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையின் மீதான விமர்சனங்களின் மூலம் எச்சரிக்கை விடுக்கின்றது. அத்தோடு மாநில மனித உரிமை ஆணையத்தை வலிமைப்படுத்தும் பரிந்துரைகளையும் முன் வைக்கிறது.

கடைசி அத்தியாயத்தில், அரசு நிறுவனங்களும், சட்டங்களும், நீதித்துறையும் பல்வேறு துறைகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த முடியாதபடி பலவீனப்பட்டு நிற்கின்றபோது, நம்பிக்கைக்கான ஆதாரங்களாகவும், அரசின் பொறுப்பைச் சுட்டிக்காட்டுவதற்கான, மனித உரிமைக்கான முன்முயற்சி நடவடிக்கைகளாகவும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் அரசுசாரா நிறுவனங்கள், வழக்கறிஞர்கள், விஞ்ஞானிகள், சமூக செயல்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து உருவாக்கும் பிரச்சார இயக்கங்கள் பற்றி துறைவாரியாக கூறப்பட்டுள்ளது.

இறுதியாக, இந்த அத்தியாயங்களில் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கான காரணங்கள் விவாதத்திற்குரியவையாக இருக்கலாம். அவற்றில் சிலருக்கு மாற்றுக் கருத்துகள்கூட இருக்கலாம். ஆனால் கூறப்படும் அனைத்துத் துறைகளிலும் நலிந்துள்ள மனித உரிமை மீறல்களையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளையும் பொறுத்தவரை யாவருக்கும் எந்த மாற்றுக் கருத்தோ, சந்தேகமோ இருக்க முடியாது. எனவே இத்தகைய மனித உரிமை மீறல்கள் மனித உரிமை அமைப்புகளுக்கும், சமூக செயல்பாட்டாளர்களுக்கும் முன்னால் விடப்பட்ட சவால்களே. இந்த சவால்களை எப்படி எதிர் கொள்ளப் போகிறோம்?

எந்தவிதச் சந்தேகத்திற்கிடமுமின்றி அரசின் மெத்தனப் போக்கையே இந்த மீறல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இந்த மீறல்களை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும் உடனடி நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையோடு....

**நேர்மையானது எது என்பதை அறிந்த பின்னும்**
**அதைச் செய்யாமல் இருப்பது**
**கோழைத்தனம்.**

**-கன்ஃபூசியஸ்**



படிப்பகம்

www.padippakam.com

# முனகும் சிறு குழந்தைகள்

-யவுனிகா ஸ்ரீராம்

காற்றுத் திறக்கிறது
கைகளற்றுப் போன ஏராள சாளரங்களை
இடிபாடுகளுக்கிடையே
மூர்ச்சை தெளிந்தவர்களில்
ஏகோபித்த குரல் அடைக்கிறது
முனகும் சிறு குழந்தையின் வாயை
மீன்களின் உலகத்தில் புழுப்போல
பறவைகளின் உலகத்தில் தானியமணி போல
பாம்புகளின் உலகத்தில் தவளைகள் போல
விட்டில்களின் உலகத்தில் பசுந்தளிர் போல
உயிரின் பதற்றமானது
முனகும் சிறு குழந்தையின் வாயை அடைக்கிறது
பிறப்பைத் திறந்து வைக்காமல்
மரணம் மூடியபடி இருக்குமெனில்
மின்னல் காலத்தில் காளான்களைப் போல
புனலின் காலத்தில் நாணல்களைப் போல
வெயிலின் காலத்தில் கானலைப் போல
எதனைப் போல, யாரைப் போல
ஏன் போல எங்கும் போல
குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன

*தமிழனின் வீழ்ச்சிக்குக் காரணம் பார்ப்பனியம் மட்டுமல்ல*
*திராவிடமும்தான் எனும் முழக்கத்துடன், மாதந்தோறும்*
*வணிகப் பத்திரிகைக்கான உருவில்*
*தமிழர் தேசியம் எனும் உள்ளடக்கத்துடன்*

**வேர்கள்**

*தொடர்புகளுக்கு* : அரிமாவளவன்
10அ3, வாத்துக்காரத் தெரு,
உறையூர், திருச்சி - 620 003

*ஆண்டு கட்டணம் ரூ. 60.00* *வாழ்நாள் கட்டணம் ரூ. 500.00*

www.padippakam.com


**மின்னணு ஊடகங்களின் வளர்ச்சி**
**படிக்கும் பழக்கத்தை அழித்துவிடாது**



இம்முழக்கம் அடிக்கடி நிரூபிக்கப்பட்டு வருகிறது.

எங்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது.
எனவே...

நவீன இலக்கியங்கள்
முற்போக்கு இலக்கியங்கள்
பழந்தமிழ் இலக்கியங்கள்
இடைக்கால இலக்கியங்கள்
தலித் இலக்கியங்கள்

என அனைத்து இலக்கியப் படைப்புகளும்,
அப்படைப்புகள் தொடர்பான படைப்புகளும்,
உள்ளூர் படைப்பாளிகளின் படைப்புகளும்,
20-க்கும் மேற்பட்ட சிற்றிதழ்களும் வாங்கிட

**புதிய உதயம்**



**புதியா புத்தகக் கடை**
**காந்தி திடல் (அருகில்)**
**சின்ன புளியம்பட்டி**
**அருப்புக்கோட்டை-626 101**



www.padippakam.com

கதவு - 9 ஜனவரி - 2001 தனிச்சுற்றுக்கு மட்டும்

விரைவில்....

# சிறுவர் இதழ் க்கான அனைத்துக் தளங்களுடன் ஒரு - சிறுவர் இதழ்.

படைப்புகள்,
துணுக்குகள்
இதழுக்காக முன்மொழியும் பெயர்,
கருத்துக்கள்,
அட்டைப் படத்திற்கான ஆலோசனை,
பிறவிபரங்களுடன்

தொடர்பு கொள்ள :
கருத்தாளர் வட்டம்
5.36.4ஆ, பாரதி நகர்
மின்வாரிய குடியிருப்புகள் கிழக்கு,
அருப்புக்கோட்டை - 626 101.
தொலைபேசி : 04566 73322.

BOOK PACKET CONTAINING
PRINTED BOOKS ONLY

5-36-4ஆ, பாரதி நகர்
மின்வாரிய குடியிருப்புகள்(கிழக்கு)
அருப்புக்கோட்டை - 626 101.
✆ 04566 - 73322